# தளிர்



வெளியீடு :

கோறளைப்பற்றுப் பிரதேச, சிறுவர் கழகங்களின்
ஆக்கச் செயற்பாட்டுத் தொகுப்பு நூல்

இதழ் - 3

# முன்னுரை


தமிழுப் புலவர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரில் முக்கனிகளில் ஒன்றான வாழை என்னும் சேனையுடன் பெயரை தன்னகத்தே கொண்ட வாழைச்சேனையில் மக்கள் சிறப்பாக வாழ்ந்து கொண்டு வருகின்றார்கள். இவ் வாழையூரில் உள்ள சிறுவர்கள் தங்களது திறன்களை "தளிர்" என்னும் சிறுவர் நூலில் மூன்றாவது முறையாக வெளியிடுகின்றார்கள்.

இவ் வாழையூரில் தற்போதைய அபிவிருத்தியின் பயனை அனுபவித்து வரும் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள் தமது வாழ்வினை சிறப்பாக நடாத்தி வருகின்றார்கள். இவர்கள் ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து தமது திறன்களை வெளிப்படுத்துகின்றனர்.

இப் பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகத்துடன் இணைந்து சேவையாற்றும் எஸ்கோ நிறுவனத்தின் பன்னிரெண்டு சிறுவர் கழகங்களில் உள்ள சிறுவர்கள் தமது ஆற்றல்களையும், சிந்தனைகளையும், திறமைகளையும் சேர்த்து "தளிர்" என்ற பெயரில் மூன்றாவது இதழ் பிரசவிக்கப்பட்டுள்ளது.

இத்தோடு இந்நூல் வெளியீட்டுக்கு கைகொடுத்த அனைத்து உறவுகளுக்கும் எமது மதிப்பிற்குரிய சிறுவர் கழக சிறார்களுக்கும் நன்றி கூறுகின்றோம். இவ் இதழ் வெளியீடானது. இவ்வருட சிறுவர் தின தொனிப்பொருளாக "குடும்பம் உங்களைப் பாதுகாக்கும்" என்னும் பொருளில் கொண்டாடப்படுகின்றது.

இந்நூல் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்திகளையும் எமக்கு அழித்த எமது பிரதேச செயலாளர், எஸ்கோ நிறுவனப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் எமது சிறுவர் கழகத்தின் சிறார்கள் அனைவருக்கும் எமது கழகங்களின் சார்பில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



க. கௌதம்,
எஸ்கோ சிறுவர் கழக வலைப்பின்னல் தலைவர்


# ஆசியுரை

கோறளைப்பற்றுப் பிரதேச செயலகப்பிரிவில் எஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் எமது சிறுவர் கழகங்களின் வலைப்பின்னல் குழவினால் மூன்றாவது "தளிர்" மலர் வெளியீட்டுக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

சிறுவர் தொடர்பாக தனது செயற்பாடுகளை ஆற்றிக்கொண்டிருக்கும் எஸ்கோ நிறுவனத்திற்கு என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சிறுவர்களுக்குள் புதைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு இது ஒரு பாலமாக அமைகிறது. அதுமட்டுமல்ல சிறுவர்களால் வெளியிடப்படுவது இதன் சிறப்பம்சமாகும்.

தற்காலத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றை அவர்கள் மூலமாகவே வெளி உலகிற்கு கொண்டுவந்து மக்கள் மத்தியில் ஒரு வழிப்புணர்வு ஏற்படுத்துவதும் இதன் நோக்கங்களுள் ஒன்றாகும்.

தளிர் எப்போதும் பசுமையானதாகவும் உயிர் மூச்சுடனும் பலருக்கும் பயன்படும் வகையில் வருடாவருடம் வெளிவர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி என் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



திருமதி.டினேஸ் தட்சணா கௌரி
பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்,
கோறளைப்பற்று, வாழைச்சேனை

# ஆசிச்செய்தி

மட்டுமாநகரினிலே கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சிறார்கள் தங்களின் சிறுவர்தின சிறப்பு வெளியீடாக தளிர் என்னும் நூலின் மூன்றாவது இதழை இம்முறை வெளியிடுகின்றனர்.

மாணவர்கள் தங்களின் எழுத்தாற்றல், கற்பனைத் திறன்கள் மற்றும் திறன்விருத்தி செயற்பாடுகளை வெளிப்படுத்தும் களமாக இதைப் பயன்படுத்துகின்றார்கள்.

தளிர் சிறப்பு நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவர்களது ஆக்கத்திறன் செயற்பாடு விருத்தியடைந்த சிறந்த தலைமைத்துவம் உளநல மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கியதால் சமூக மாற்றத்துக்கு தங்களால் ஆன பங்களிப்பை சிறந்த முறையில் செயற்படுத்தி வருகின்றனர். எனவே இச்சிறார்களின் வாழ்க்கை சிறப்பாக அமைய எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**S.பிரித்தியோன்,**
ESCO – பணிப்பாளர்
மட்டக்களப்பு.


# ஆசிச்செய்தி

**"மனித வாழ்க்கையின் சிறப்பான பராயமே சிறுவர் பராயம்"**

மனித வாழ்க்கையின் சிறப்பான பராயமே சிறுவர் பராயம். இக் காலத்தில் பதிக்கப்படுகின்ற சிந்தனைத்துளிகள் ***இறுகச் சொருகிய இலட்சிய ஆணிகளாகின்றன.*** மனதிலே உதிக்கின்ற எண்ணங்களை செயல் வடிவமாக்கி சமுதாய விழுமியங்களைப் பேணிக்காப்பதற்கு சிறப்புச் சேவைகள் அவசியமாகின்றன.

இவ்வகையில் வாழையூர் சிறுவர் கழகம் "எஸ்கோ" நிறுவனத்தால் ஸ்தாபிக்கப்பட்டு சிறப்பாக செயற்பட்டு வரும் இக்கால கட்டத்திலே சர்வதேச சிறுவர் தினம் தொடர்பாக வெளியிடப்படும் "தளிர் - 3" இதழ் 2013ஆம் ஆண்டு சிறப்பு மலராக வெளிவருவதையிட்டு மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியுடைகின்றேன்.

சிறந்த சிறுவர் வளங்களைக் கொண்ட கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 'எஸ்கோ" கிளையினரின் வழிகாட்டலும் பொறுப்பாளரின் ஊக்குவிப்புடனும் தளிரினூடாக தங்கள் ஆக்கங்களை சமூகத்திற்கு மற்றுமொரு தடவை தெரிவித்து சிறப்படைவதையிட்டு இவ்வேளையில் சிறுவர் கழகத்துடன் தொடர்பான சம்பந்தப்பட்ட அனைவரையும் வாழ்த்துவதோடு எஸ்கோ நிறுவனம் எப்போதுமே உங்களுடன் இருந்து உதவும் என்பதையும் வெளிப்படுத்தி இறைவன் அருள் உங்கள் வளர்ச்சியில் எப்போதுமே கிடைக்க ஆசி வேண்டி நிற்கின்றேன்.



பொன். தெய்வேந்திரா, தலைவர்,
எஸ்கோ
மட்டக்களப்பு

# உள்ளடக்கம்


1. FRIENDSHIP - 01
2. அறிவு - 02 – 03
3. விடுகதைகள் - 04
4. யாருமில்லை - 05
5. எனது குடும்பம் - 06 – 07
6. உலகமயமாதல் என்பது - 08
7. அழகு - 09
8. GOD'S GIFT – "NATURE" - 10
9. பூக்கள் - 11
10. கணிணி கற்போம் - 12 – 13
11. அம்மா - 13
12. உழைக்கும் மனிதா...! - 14
13. இயற்கை வளங்களை.... - 15
14. கல்வி - 16
15. நண்பா - 16
16. பாடல் - 17
17. பொது அறிவு - 18
18. தாய் - 19
19. நட்பு - 20
20. முயலை வென்ற ஆமை - 21
21. தவளையும் சிங்கமும் - 22
22. கண்டுபிடிப்புக்கள் - 23
23. நாளை தலைவர்களுக்கு.... - 24
24. விடுகதைகள் - 25
25. விடுகதைகள் - 26
26. நம் உடலின் பாகங்கள் - 27
27. பெண்ணே... - 28
28. காவடிச் சிந்து - 29 – 30
29. மாணவர்களும் இடைவிலகலும் - 30 – 41
30. ஆசிரியர்கள் மாணவர்களை.... - 42 – 50
31. முதியோர் - 51

32. தாவரங்களின் தாவரவியல் பெயர் - 52
33. ஏக்கம் - 53
34. நட்பு - 54
35. நினைவுகள் - மனதின்... - 55
36. காலம் வரும் - 55
37. Time - 56
38. உலக நாடுகளின் சுதந்திர தினம். - 56
39. ஆணும் பெண்ணும் சரிநிகர் - 57 – 58
40. தோழியே! - 59
41. சிறுவர் உலகம் ஒளி பெற...! - 60
42. சிறுமியைக் காப்பாற்றிய நாய் - 61
43. நோய்களும் காரணிகளும் - 62
44. WHAT IS CHILDREN? - 62
45. வெற்றிக்கான குணங்கள் - 63
46. அன்னைமொழி - 63
47. துண்டுப்பிரசுரம் - 64
48. அகம்பாவம் மிக்க குதிரை - 64
49. ஒரு பட்டமரம் துளிர்க்கிறது - 65
50. தாய், தந்தையை இளந்த.... - 66
51. அமுதவாக்கு - 67 – 68
52. கடிக் கேள்விகள் - 68 – 70
53. நிலையான தோல்வியுமில்லை - 70
54. சீனியின் கதை - 71 – 72
55. கவிதைகள் - 72 – 74
56. வேடன் எறிந்த.... - 75 – 76
57. தாய் - 76
58. வனங்களை அழித்தல் - 77
59. சிறுவர்களின் ஏக்கம் - 78
60. பெற்றோரின் மகத்துவம் - 79
61. Technology - 80
62. தீராத துன்பங்கள் - 81 - 83
63. அழகு மிகு கிராமம் - 84
64. எஸ்கோ நிறுவனத்தின்.... - 85 – 88



# FRIENDSHIP

தாயின் கருவறையில் உயிர்
பெற்றேன்
தந்தையின் வழிகாட்டலில் அவர்
கைகோர்த்து நடந்தேன்
சுதந்திரப் புறாவாக வானில்
செல்கையில் – கல்வி என்னும்
மூன்றெழுத்து என்னைத்
தடுத்தது
அதன் வழி நான் செல்கையில்
நட்பு எனும் மூன்றெழுத்து
அன்பு எனும் மூன்றெழுத்தைத்
தந்தது
ஸ்நேகமே கண்ணீர்
சிந்துகையில் – அந்த
கண்ணீர்த் துளியையும்
வைரமாக்கும்
கலையைக் கற்றுத் தந்தாய் –
அந்த
அழகான ரோஜாப்பூ ஏழு
நாட்களில்
உதிர்ந்து விடும்
மிகப் பெரிய டைட்டானிக்
சிப் கூட
மூழ்கிவிடும் – ஆனால்
ஸ்நேகமே நம் நட்பு பூ அல்ல
உதிர்ந்து போவதற்கு
டைட்டானிக் சிப் அல்ல
மூழ்கிப் போவதற்கு – இது
Friendship என்றும்
வாடாமலும்
மூழ்காமலும் இருக்கும்.



S.Kuksikka,
கறுவாக்கேணி.



# அறிவு

அறிவு எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதது. மனித வாழ்வு அறிவையும், உணர்வையும் அடிப்படையாகக் கொண்டமைந்தது எனலாம். உணர்வையும், அறிவையும் வளர்க்கும் கருவியாகவே கல்வி திகழ்கிறது.

அறிவு என்பது பகுத்தறிவு, சிந்தனை, துணிவு போல பல வகைப்படும். அறிவைப் பெறுவதற்கு உறுதுணையாக அமைவதே கல்வியாகும். பல நூல்களைக் கற்பதன் வாயிலாகவே கல்வியைப் பெற முடியும்.

அறிவும், உணர்வும் ஒவ்வோர் உயிர்க்கும் இன்றியமையாததாய் இருப்பதால் இவ்விரண்டும் ஒன்றுடனொன்று தொடர்புற்றுக் காணப்படுகின்றது. எனவே கற்கின்ற அளவுக்கேற்ப மக்களின் அறிவு வளர்ச்சியடைந்து செல்லும்.

நல்ல அறிவானது கல்வியால் வளர்ச்சியடையும். இந் நல்லறிவையடைய நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து கற்க வேண்டும். அதுவே உண்மையான அறிவைத் தரும்.

அறிவை வளர்ப்பதற்குக் கல்வியும், கேள்வியும் மிகவும் அவசியமானதாகும். கற்றல் என்பது பயிற்சியை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைகின்றது. இங்கு பயிற்சியானது பல நூல்களைக் கற்றுத் தேறுவதைக் குறிக்கின்றது.

நல்ல நூல்களைக் கற்றுத் தேறுவதன் மூலம் நல்ல கருத்துக்களையும், அறிவுபூர்வமான சிந்தனைகளையும் சமுகத்துக்கு வழங்க முடியும். எல்லா வகையான அழகுகளிலும் பார்க்க ஆராய்ந்தறிந்து நல்ல பல நூல்களைக் கற்பதே உண்மையான அழகாக அமையும்.

மனிதர் தேடிப் பெறக்கூடிய எல்லா வகைச் செல்வங்களிலும் மேலானது கல்விச் செல்வமாகும். எனவே **"பிச்சை புகினும் கற்கை நன்றே"** எனும் முதுமொழிக்கிணங்கப் பிறரிடம் இரந்து பிச்சையெடுத்தாவது கற்றல் வேண்டும். அந்தக் கல்வியால் கிடைக்கப் பெறும் அறிவு வெள்ளத்திலும், நெருப்பிலும் அழியாதது. கள்வராலோ, பகைவராலோ, அரசராலோ கவர்ந்து செல்ல முடியாதது. கல்வியினால் அறிவு வளரும். கல்வியை எவ்வளவுக்கு கற்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அறிவு பெருகும்.

அறிவுடையவரே வாழ்க்கையில் முன்னேற்றமடைவர். ஏழைகளாயினும் கற்றவனுக்கே முதலிடம். அரசருக்கு தன் நாட்டில் மட்டும்தான் மதிப்பு. ஆனால் கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. எனவேதான் **"அறிவுடையாரே ஆளுதல் வேண்டும்"** எனும் கருத்து நம் பண்பாட்டில் வெகு ஆழமாகப் பதிந்துள்ளது.

S.**குக்சிக்கா**
கறுவாக்கேணி.

# விடுகதைகள்

1. வண்ணப் பட்டுச் சேலைக்காரி. நீல வண்ண ரவிக்கைக் காரி அது என்ன?

   - மயில்

2. சொன்னதைச் சொல்லும் பொண்ணுக்குப் பச்சைப் பாவாடை கேட்குதாம் அது என்ன?

   - கிளி

3. தண்ணீரில் மிதக்கிறது கட்டழகிகள் அது என்ன?

   - கப்பல்

4. மணல் வெளியில் ஓடுது தண்ணீர் கேட்காத கப்பல் அது என்ன?

   - ஒட்டகம்

5. தொட்டுவிட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன?

   - தொட்டாச் சுருங்கிச் செடி

6. வானத்தில் பறக்கும் பறவை. அது ஊரையே சுமக்கும் பறவை அது என்ன?

   - விமானம்

7. வெப்பமான பெட்டிக்குள் அழகு மணிமுத்துக்கள் அது என்ன?

   - பப்பாசிப்பழம்

8. மூவராய்ச் சேர்வார்கள். சிவப்பு வர்ணம் தீட்டுவார்கள் அவை எவை?

   - வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

9. புளிப்பானவனுக்கு உப்பு போதலயாம். மூடிவச்ச ஜாடிக்குள்ளே உப்பில் நீந்துவான் அவன் யார்?

   - மாங்காய் ஊறுகாய்

10. வெள்ளைக்கார வீரன் சுட்டுப் போட்டால் நொறுங்குகிறான் அவன் யார்? அப்பளம்

யோ.தவமலர் (தரம் – 07)
சுங்காங்கேணி, இளம்தளிர் சிறுவர் கழகம்

# யாருமில்லை



உண்பதற்கு உணவுண்டு

ஊட்டிவிட யாருமில்லை

உறங்குவதற்கு இடமுண்டு

தாலாட்ட யாருமில்லை

பராமரிக்க ஆட்கள் உண்டு — ஆனால்

அரவணைக்க யாருமில்லை

பார்க்க பரதேசிகள் போலிருந்தாலும்

எங்களுக்கு உணர்வுகளுண்டு

எங்களுக்கும் ஆசைகளுண்டு

ஆனால் நிறைவேற்ற உறவுகளில்லை.

நி.திவ்யா
தீபமலர்
சிறுவர் கழகம்

# எனது குடும்பம்

ஈரைந்து மாதங்கள் என்னைக் கருவறையில்
சுமந்து பக்குவமாய் பாசமுடன்
பெற்றெடுத்த எனது - அன்னை
எனக்குப் பாதுகாப்பை பரிசளித்தாள்

வளர்ந்து வரவுள்ள நான் - என் வாழ்வில்
பலவகையான பாதிப்புக்களை எதிர் கொள்ளவே
எனக்குப் பாதுகாப்பைப் பரிசளித்தால்
எனது அன்னை

தாலாட்டிச் சீராட்டி தன் தோழிலே – என் தலை
சாய்த்துக் கண்ணுறங்க வைத்த – எனது
தந்தை – எனக்கு நிம்மதியினை
நிரந்தரமாக்கினார் வாழ்வில்

நிழலாக இருந்த நான் நிஜமாக மாறும்போது – பல
நிசப்பதங்களை அனுபவிக்க வேண்டும்
என்பதற்காகவே
நிம்மதியை நிரந்தமாக்கினர் - எனது தந்தை

குடும்பம் எனும் ஐந்தெழுத்தில் பாசமூட்டி
பல்கலைகளைப்
பயிற்றுவித்து – நல் வழி காட்டி
நல்வழிப் படுத்துகின்றனர் எனது பெற்றோர் என்னை.

சிறுமி எனது உரிமைகளைச் சிறப்பாய்ப் பெற்றிட
என்றும் - சிந்தித்து செயற்பட தூண்டுகோலாக
துணை நிற்பவர்கள் - எனது பெற்றோர்.

இனிதாய் வளர்ந்தே இனிய மொழி கற்று
இன்பமுற வாழப்பெற - இனிய வழிகாட்டி
இயக்குபவர்கள் - எனது பெற்றோர்.


பாடசாலை செல்லும் வயதில் பல இன்னல்கள்
ஏற்படும் போது பக்கபலமாக நின்று
பாதுகாப்பு அளிப்பவர்கள் - எனது சகோதர
சகோதரிகள்..

வீதியில் செல்லும் போது விபத்தில் மாட்டிக்
கொள்ளாமல் இருக்க – விழிப்புணர்வு அளித்து
பாதுகாப்பவர்களும் எனது உடன் பிறப்பே

இனிய உறவுகளுடன் இனிதே வாழும்
இவ் வாழ்க்கை – என்றும் என்
வாழ்வில் நிலைக்க வேண்டும் - இறைவா!

நி.தாட்ஷாயினி.
தீபமலர் சிறுவர் கழகம், கண்ணகிபுரம்.

# உலகமயமாதல் என்பது !!!



டயானா இங்கிலாந்து இளவரசி எகிபடதைச் சேர்ந்த சினேகிதனுடன் ஜேர்மன் காரில் பயணம் செய்ய டச்சு நாட்டு சாரதி காரைச் செலுத்தினார். ஜப்பானிய மோட்டர் சைக்கிள்களில் வந்த இத்தாலிய நிருபர்களுடன் பிரான்ஸ் சுரங்கப் பாதையில் விபத்து ஏற்பட்டது போத்துக்கேய டாக்டர் சிகிச்சை அளித்தார். பிரேசில் மருந்துகளை பயன்படுத்தினார். நேபாளத்தின் வழியே கடத்தி வரப்பட்ட சீன செல்போன் மூலம் செய்தி இந்திய நிருபரால் அனுப்பட்டது.


**நி. தரணிக்கா**
தீபமலர் சிறுவர் கழகம்
கண்ணகிபுரம்

# அழகு...

அன்புக்கு அருள் அழகு
பொன்னுக்கு ஒளி அழகு
பூவுக்கு நிறம் அழகு
பேச்சுக்கு நடை அழகு

அறத்திற்குக் கொடை அழகு
வானுக்கு நிலவழகு
பெருமைக்குப் பணிவழகு
வாய்மையே நமக்கழகு

சி.சிந்துஜா
கறுவாக்கேணி



# GOD'S GIFT – "NATURE"

When the beautiful morning comes
The ray of rising sun kisses her
When the garden of nature open its heart

The garden of flowers hugs her to welcome
When the trees dance for tune of wind
The birds singing to the nature's chair

When the gentleness of nature is filled
pleasure
Then the earth gets wet with weather
When the nature forgets its vist a

Then the god shows her how big
place on earth
let us thank god for his creation and given
usEyes to see lovely gift — NATURE

**N. Thadshayini, Secretary**
Network Team, Valaichenai

# பூக்கள்


வண்ண வண்ணப் பூக்கள்
வாசம் வீசும் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
சிவப்பு நிறப் பூக்கள்

செந்தாமரைப் பூக்கள்
சூரியனை நோக்கி மலர்ந்திடும்
வடிவாய் அமைந்த பூக்கள்
இரசிக்க வைக்கும் பூக்கள்

ஆ.டிலக்சிக்கா,(தரம்- 08)
இளம்தளிர் சிறுவர் கழகம்,
சுங்காங்கேணி



# கணினி கற்போம்



இன்று உலக மக்களால் பெரிதும் உச்சரிக்கப்படும் ஒரு சொல் கணிணி என்பதாகும். கணிணி என்னும் இக் கருவியை முதன் முதலில் வடிவமைத்தவர் சார்ல்ஸ் பார்பேஜ் என்பவராவார். இவர் கணிதச் செயற்பாடுகளைச் செய்யும் பொருட்டே இக் கருவியை கி.பி.1834 இல் வடிவமைத்தார்.

இவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்.இவரது கணிணி உருவாக்கமே இன்றைய கணிணி உருவோக்கங்கருக்கு வழிகாட்டியது எனலாம். இதனாலேயே இவரைக் கணிணியின் தந்தை என உலகம் போற்றிக் கொண்டாடுகின்றது.

கணிணி முதலில் கணக்குப் போடத்தான் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இன்று அது அதிசயப்படும் வகையில் அனைத்துத் துறைகளிலும் பயன்படுகின்றது. குறிப்பாகப் பொறியியல், மருத்துவம், வணிகம், வங்கி, வேளாண்மை, வானியல் போன்ற பல துறைகளிலும் வியத்தகு வகையில் விந்தைச் செயல்களைச் செய்கின்றது.

வானூர்தி, ஏவுகணை போன்ற பல சாதனங்களைக் கணிணி இயக்குகின்றது. வானவெளியில் பவனிவரும் செயற்கைக் கோள்களைக் கட்டுப்படுத்துவதும் இயக்குவதும் கணிணிகளே.

இவை மட்டுமல்ல உலகத்தையே அதிசயத்தில் ஆழ்த்திடும் இயந்திர மனிதர்களை (ரோபோக்களை) இயக்கவது கணிணியே என்றால் மிகையல்ல. இத்தகைய ஆற்றல் தரும் கணிணிக் கல்வியைக் கற்றிட மாணவர்கள் அனைவரும் முன்வர வேண்டும்.


## அம்மா



உதிரத்தைப் பாலாக்கி
மடிதனை மெத்தையாக்கி
அல்லும் பகலும் கண் விழித்து — என்னை
ஆளாக்கிய என் அன்னையே!
உன்னைப் போற்றுவேன் – இத்
தரணியில் உள்ளவரை


*ச. ருக்சனா, கல்மடு*
*ஒளிச்சுடர் சிறுவர் கழகம்*

# உழைக்கும் மனிதா...!



வெயிலும் கொட்டும் மழையும் பாராது
வியர்வை சிந்தி உழைக்கும் மனிதா..!
இன்று உனக்கென எதைச்
சேமித்து வைத்துள்ளாய்?
உதிரத்தைத் தேயிலைக்கும் உழைப்பை
மற்றவனுக்கும் கொடுக்கும் மனிதா!
இந்த நிலையைச் சந்ததிக்கும்
விட்டு விட்டுச் செல்லாதே
அவர்களாவது அடிமையின்றி உழைக்கும்
வாழ்வைத் தொடரட்டும்.

**ர.ரனோஜினி, கல்மடு,**
ஒளிச்சுடர் சிறுவர் கழகம்



# இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்...!

உயிர் இருந்தும் நிலையானோம்
நிலை பெற்று நிழல் தந்தோம்
நிழல் தந்து சிலை காத்தோம்
நான் காத்த சிலை உன்னைக் காக்கும் என்றாய்
சிலை காத்த என்னை ஏன் காக்க மறந்தாய்..

கரிவாயு உட்கொண்டு உயிர்வாயு உமக்களித்தோம்
பிறர் உயிர் பிழைக்க மழை தந்தோம்
வந்த மழை கொண்டே உயிர் பிழைத்தோம்
எழுத்துக்குக் காகிதமாய் உலகெங்கும் உருப்பெற்றோம்..

எதையெதையோ உருவாக்க எரிபொருளாய் உருக்குலைந்தோம்
பசுமை என்னும் பாற் கடலை மண்மேலே படைத்திருந்தோம்
ரசனை என்பது சிறிதுமின்றி வனத்தோடு வதம் செய்தாய்
வானளவு வளர்த்திருந்தோம்
வாள் கொண்டு வதை செய்தாய்
நோயற்ற வாழ்வளித்தோம் நொடிப் பொழுதில்
வீழ்த்தி விட்டாய்....

வானம் பார்த்த பூமியிலே வனம் காக்க யாருமில்லை
வீட்டுக்கொரு மரம் வளர்த்தால் வீதிக்கே மழை கொடுப்போம்
காட்டை நீ காத்து வந்தால் நாட்டுக்கே நலம் சேர்ப்போம்
வனம் யாவும் செழித்திருந்தால் வளமாகும் தேசம் எங்கும்
இயற்கை வளங்களைக் காத்திடுவோம்,
இயற்கையோடு இணைந்திருப்போம்.

L.துஷாந்தன்,தரம் - 07B
இளம்தளிர் சிறுவர் கழகம்,
சுங்கான்கேணி.




## கல்வி

கல்வி ஒரு அகல் விளக்கு
இறைவன் அளித்திடும் அருள் விளக்கு
அது இருளை அகற்றும் ஒளி விளக்கு
கற்றோர் விரும்பும் ஒரு விளக்கு...

கல்வி ஒரு அறிவின் விளக்கு
அறிவொளி தரும் விளக்கு
உலகைக் கல்வியால் வெல்லலாம்
கல்வி விளக்கை ஏற்றுவோம்.

**நா.சஸ்னுகாயினி,**
கறுவாக்கேணி,
ஒளிவீச்சு சிறுவர் கழகம்.


## நண்பா..!




அண்ணன் தம்பி உறவுகள்
அக்கா தங்கை பாசங்கள்
தாயாக சேயாக மாறி
தலை கோதும் நட்புக்கள்
அழகான ஒரு குடும்பம்
என் நண்பர்கள்

என் கண்ணீரில் கை கொடுக்கும் உறவுகள்
என் நண்பர்கள் போதுமே
என் உலகம் அழகான
இறைவனிடம் வரம் கேட்கின்றேன்
உடலால் இறந்தாலும் நினைவால் தொடர்ந்து வேண்டும் என்
நண்பர்கள்


சிலம்பொலி சிறுவர் கழகம்,
கும்புறுமூலை.



# பாடல்

கடற்கரைக்குச் செல்லுவோம்
காற்று வாங்கி மகிழ்வோம்
மணல் வீடு கட்டுவோம்
மகிழ்ந்து நாங்கள் பாடுவோம்.


சிப்பி சோழி பொறுக்குவோம்
சிறிய பையில் போடுவோம்
வீடு கொண்டு செல்லுவோம்
விளையாடி நன்கு மகிழ்வோம்.



# பாடல்

## ஆறு

மலையில் வழிந்து வருகையிலே
மலைப்பால் அருவியானாயே?
தலையில் சுமந்து வளர்த்தாயே
தரவே தாவி வந்தாயே....




காட்டில் வாழும் உயிர்க்கெல்லாம்
கசிந்து நீரைத் தந்தாயே
நாட்டில் வாழும் மக்களுனை
நாட ஓடி வந்தாயே...

கொன்றை ஆடையது போர்த்தே
கொள்ளை அழகாய் நடந்தாயோ?
அன்றே போல் நின்று நீ
ஆடிப் பள்ளம் கடந்தாயோ...!

த.கோகிலா, தரம் 07B
இளம் தளிர் சிறுவர் கழகம்,
சுங்காங்கேணி.



# பொது அறிவு



1. இலங்கையின் அழகினை வர்ணித்தவர் யார்?
   - ஜோன்.டீ.மெரிதெலி
2. ஜோன்.டீ.மெரிதெலி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   - இத்தாலி
3. இந்து சமுத்திரத்தில் அமைந்த பெரிய தீவு எது?
   - மடகஸ்கார்
4. பெருமளவு தீவுகள் காணப்படும் கோளம் எது?
   - வட அரைக் கோளம்
5. சூரியன் அஸ்தமிக்காத நாடு எது?
   - பிரித்தானியா
6. சூரியன் முதலில் உதிக்கும் நாடு எது?
   - பிஜித் தீவுகள்
7. சுற்றுலாத் துறையில் முன்னேறிய நாடு எது?
   - சீசெல்ஸ் தீவு, பிஜிதீவு
8. கைத்தொழிலில் முன்னேறிய நாடு எது?
   - ஜப்பான்
9. சீனி உற்பத்தியில் முன்னேறிய நாடு எது?
   - கியூபா
10. புவி மேற்பரப்பில் காணப்படும் நீரினுடைய சதவீதம் எத்தனை?
    - 79%
11. இலங்கையைச் சூழவுள்ள கடலின் நீளம் எவ்வளவு?
    - 1770Km
12. இலங்கையில் சூறாவளி வீசும் காலப்பகுதி யாது?
    - ஒக்டோபர், நவம்பர், டிசம்பர்
13. "சுனாமி" என்ற சொல் எந்த நாட்டுக்குரிய சொல்லாகும்?
    - ஜப்பான்

**சி.மதுசாளினி,07B,**
இளம்தளிர் சிறுவர் கழகம், சுங்காங்கேணி

# தாய்



தாய் அன்பானவள்
அவள் அன்பின் வடிவம்
அவள் அன்பால் உயர்ந்தவள்
அவளைப் போல் யாரும் இல்லை


அவள் பாசத்தைக் காட்டுபவள்
ஆனால் வெறுப்பைக் காட்டுபவள்
அல்ல
அவள் தெய்வமாக இருப்பவள்
கண்ணை இமை காப்பது போல்
காப்பவள்



துன்பங்களை மனதில் வைத்து
இன்பங்களை வெளியில் காட்டுபவள்
அவள் கருணை மிக்கவளாக இருப்பவள்
அவளைப் போல் யாரும்
இவ் உலகில் இல்லை.

சி.சிந்துஜா.கறுவாக்கேணி.
ஒளிவிச்சு சிறுவர் கழகம்


## நட்பு



மூன்று எழுத்துக் கொண்ட காதல்
மனதில் இருக்கும் பாரம்
ஆனால் மூன்று எழுத்துக் கொண்ட நட்பு
மனதில் இருக்கும் பாரம் அல்ல
நட்பு இனிமையான வாழ்க்கை
நட்பைப் பிரிந்தால் அதைப் போல்
சோகம் ஒன்றும் இல்லை.

செள.நிதர்ஸ்சா,
ஒளிவீச்சு சிறுவர் கழகம்,
கறுவாக்கேணி


# முயலை வென்ற ஆமை



ஓர் ஊரில் ஒரு ஆமையும், முயலும் இருந்தன. அவை இரண்டும் ஒரு நாள் தங்களுக்குள் போட்டி வைப்பதற்கு முடிவு செய்தது. முயல் ஆமையிடம் நமக்கு இருவருக்கும் ஓட்டப்போட்டி வைக்கலாம் என்று முயல் தந்திரத்தோடு சொன்னது. அதற்கு ஆமை சரி என்று சொன்னது. முயல் சொன்னது இந்தப் போட்டியில் யார் வெல்கின்றார்களோ அவர்தான் இந்தக் கூட்டத்திற்குத் தலைவன் என்றது முயல். முயலின் தந்திரம் ஆமை ஓடாது என்பது முயலுக்குத் தெரியும். அதனால் போட்டி போட்டது. அதன் பிறகு போட்டி நடைபெற்றது. அப்போது முயல் ஆமையை விட்டு நெடுந்தூரம் ஓடியது. அப்போது முயல் சாரத்தில் ஓடிப்போய் நின்று யோசித்தது. ஆமை மெதுவாக வர மட்டும் நான் தூங்கி எழுந்திடலாம் என்று தூங்கியது. அப்போது ஆமை மெது மெதுவாக வந்து முயலை வென்றது. அப்போது முயல் யோசித்தது நாம் ஒருவரின் செயலை வைத்து மிக எளிமையாக நினைக்கக் கூடாது என்று நினைத்தது.

K.கிதுர்சிக்கா,
தீச்சுடர் கழகத்தினர்,
கருங்காலிச்சோலை,
பேத்தாழை

# தவளையும் சிங்கமும்



ஒரு குளக் கரையின் மரத்தடியில் சிங்கம் ஒன்று படுத்திருந்தது. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சிங்கம் திடீரென்று ஒரு சப்தம் கேட்டு பதறி விழித்துக் கொண்டது.

சப்தம் என்று தெரியாமல் சிங்கம் பதறியது. அது நாலா பக்கமும் பார்த்தது. ஒன்றையும் காணவில்லை. கண்ணுக்கு எதுவும் புலப்படாமல் சப்தம் மட்டும் வருவதைக் கண்டு சிங்கம் மிகவும் பதறியது. அதிக கோபத்தோடு எழுந்தது. சிங்கம் குளத்தைப் பார்த்து ஒரு தவளை தண்ணீரிலிருந்து கரைக்கு வருவதைப் பார்த்து திடுக்கிட வைத்த சப்தத்திற்குக் காரணம் இதுதான். தவளையின் சப்தம்தான் என்று அறிந்தது. கோபத்தோடு கர்ஜித்தது. தவளை நடுங்கி விட்டது. சிங்கம் குளத்தில் குதித்துத் தவளையைப் பிடித்துக் கொன்றது.

**நீதி: தவளை தன் வாயால் கெடும் என்பது பழமொழி.**

இ.பிரதீபன்,தரம்-07

# கண்டுபிடிப்புகள்




1. மின்குமிழைக் கண்டுபிடித்தவர்
   தோமஸ் அல்வா எடிசன்
2. சீமெந்தைக் கண்டுபிடித்தவர் - ஜோசப் அஸ்பிடின்
3. குருதியினத்தைக் கண்டுபிடித்தவர்
   கார்ரான்ஸ் ரைனர்
4. மூலகங்களைக் கண்டுபிடித்தவர் - நிமிர்த்தி மெண்டலிவ்
5. ஒலி நுணக்குக் காட்டியைக் கண்டுபிடித்தவர் - சலேரியஸ் ஜான்சன்
6. பிறப்புரிமை பற்றிய அடிப்படைக் கொள்கைகளை வெளியிட்டவர் - கிரெகர் கொகான் மெண்டல்
7. தொலைக் காட்டியைக் கண்டுபிடித்தவர் - கலிலியோ கலிலி
8. வானொலியைக் கண்டுபிடித்தவர் - மார்க்கோணி
9. ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள்
   ரைட் சகோதரர்கள்
10. சந்திரனில் முதன் முதலில் காலடி பதித்தவர்
    நீல் ஆம்ஸ்ரோங்



ஜெ.லக்ஸ்ராஜ்,தரம் - 07,
மட்/கல்மடு வி.வி
ஒளிச்சுடர் கழகம்

# நாளைய தலைவர்களுக்கு ஓர் புதிய உலகம்



சிட்டுக்களாய்ப் பறந்து திரியும்
பாட்டுப் பாடி ஆட்டம் ஆடி
வண்ணப் பறவை நாங்கள்
இன்றைய உலகின் சிறுவர்கள்
நாளைய உலகின் தலைவர்கள்

கவலைகள் மறந்து
காற்றோடு கை கோர்த்து
கனவுகளோடு வாழும்
சுதந்திரப் பறவைகள் நாங்கள்

பலரும் எம்மை
பலவாறு பயன்படுத்தினாலும்
உரிமைகளோடு செல்வோம்
எதிர்காலத் தலைவர்கள் நாங்களே!

படைத்திடுவோம் புதிய உலகம்
நாம் தலைவர்களாய் வாழ்ந்திட
துஷ்பிரயோகம் அற்ற
தூய்மையான உலகம் – அதுவே
நாளைய சிறுவர்களுக்கான புதிய உலகம்
நாங்கள் தலைவர்களாகும் உலகம்.

**ச.ருக்ஷனா,தரம் – 09,**
மட்/கது/கல்மடு விவேகானந்தா
**வித்தியாலயம்.**

# விடுகதைகள்

1. அரிசி போல பூ பூக்கும். அம்மாடி என்று காய் காய்க்கும் அது என்ன?

- மிளகாய்ச் செடி

2. கொண்டை அணிந்த ஆண் பிள்ளை கூவி அழைத்தால் ஊரே விழித்திடும் அது என்ன?

- சேவல்

3. வீட்டுக்குள் வீடு கட்டி வீட்டையே கொள்ளையடிப்பான் அவன் யார்?

- எலி

4. நிற்காமல் ஓடுபவனைத் துரத்திப் பிடிக்க ஆளில்லை. அவன் யார்?

- ஆறு

5. முட்டைக்கு மூணு கண். அட்டைக்கு ஆயிரம் கண். நான் பெத்த ராசாக்கு ஒரு கண் அது என்ன?

- தேங்காய், வலை, திருவிலை, கட்டை

சு.சுதனீஸ்ரன்,தரம் - 08,
மட்/கல்மடு விவேகானந்தா வித்தியாலயம்.

## விடுகதைகள்

1. காலால் தண்ணீர் குடிப்பான், தலையில் முட்டையிடுவான் அவன் யார்?
   - தென்னை மரம்
2. தொடாமல் அழுவான். தொட்டால் பேசுவான். அவன் யார்?
   - தொலைபேசி
3. பிறருக்கு உணவு கொடுப்பான். அவன் உண்ண மாட்டான். அவன் யார்?
   - அகப்பை
4. இந்த ஊரில் அடிபட்டவன். அடுத்த ஊரில் போய்ச் சொல்கிறான் அவன் யார்?
   - தந்தி
5. இருட்டு வீட்டிற்குள் தலை முட்டுப் பலகை. அது என்ன?
   - நாக்கு
6. மணியோசைக்கு நகரமே நகர்ந்து போகுது. அது என்ன?
   - ரயில்
7. காலை அலங்கரித்தபடி கலகலக்கும் சலசலக்கும் அது என்ன?
   - கொலுசு
8. தண்ணீருக்குள் வீரியம். கரையிலோ பூஜ்யம் அவன் யார்?
   - முதலை




ம.மனோஜிதன், தரம் - 09,
மட்/கல்மடு விவேகானந்தா வித்தியாலயம்.

# நம் உடலின் பாகங்கள்

## Parts of tha body

| | | |
|---|---|---|
| 1. Head | ஹெட் | தலை |
| 2. Face | ஃபேஸ் | முகம் |
| 3. Eyes | ஐஸ் | கண் |
| 4. Ears | இயர்ஸ் | காது |
| 5. Teeth | ரீத் | பல் |
| 6. Tooth | ரூத் | பற்கள் |
| 7. Cheek | சீக் | கன்னம் |
| 8. Throt | த்ரொட் | தொண்டை |
| 9. Neck | நெக் | கழுத்து |
| 10. Nose | நோஸ் | மூக்கு |
| 11. Forehead | ஃபோஹெட் | நெற்றி |
| 12. Lip | லிப் | உதடு |
| 13. Tongue | டங் | நாக்கு |
| 14. Chin | சின் | மோவாய் |
| 15. Nerve | நெர்வ் | நரம்பு |
| 16. Brain | ப்ரெய்ன் | மூளை |
| 17. Hip | ஹிப் | இடுப்பு |
| 18. Mouth | மவுத் | வாய் |
| 19. Foot | ஃபுட் | பாதம் |
| 20. Feet | ஃபீட் | பாதங்கள் |
| 21. Chest | செஸ்ட் | மார்பு |
| 22. Finger | ஃபிங்கர் | விரல் |
| 23. Toe | ரொய் | கால் விரல் |



உதயகுமார் ரெமோனிஷா, தரம் - 08
மட்/கல்மடு விவேகானந்தா வித்தியாலயம்.


# பெண்ணே...





இடையூறுகளைக் கண்டு பயப்படாதே பெண்ணே
வீரமும் தியாகமும் நல்ல மனப்பாங்கும் உயர்
நோக்கங்களும் உன்னில் வளர்கின்றன
கற்களை யாரும் வெறுப்பதில்லை பெண்ணே
அது போல உன்னை கற்களைப் போல உன்
அறிவும் ஆற்றலும் நிறைந்து விளங்கும்...

பெண்ணே நீ கலைஞன். கற்களைப்
பயன்படுத்தி அழகான கட்டிடங்கள்
கட்டுகிறான் அதே போல் நீயும்
நல்லதை வெளிக்காட்டிடு பெண்ணே...
துன்பமதை இல்லாமல் இன்பம் அடைபவனுக்கு
வாழ்க்கை பூராகத் துன்பம் தான் குவிகின்றது பெண்ணே...



இன்பமே ஒரு நாள் துன்பமாகலாம்
கவலைகள் உன்னால் வாழ்கின்றன பெண்ணே!
அதற்காகக் கவலைக்குள் வாழாதே...
உணரும் உள்ளம்தான் உண்மையான
உள்ளம் மாதிரி. உண்மைகள் சோதிக்கப்படும் போது
உண்மைகள் உயரும் பெண்ணே...

உண்மையாக நடப்பதால் துன்பங்கள் குவிகின்றன
பெண்ணே! நீ அதற்காகப் பொய் வாழ்வைத் தேடாதே
பெண்ணே! உன்னில் இருக்கும் திறமைகளை
இவ்விடத்தில் வெளிக்காட்டு – வெற்றி நிச்சயம்

**கோ.ருஷானி**, கருங்காலிச்சோலை

# காவடிச் சிந்து

குன்று தன்னில் வீற்றிருக்கும் ஓம்
முருகையா
நீல மயில் ஏறி வரும் ஓம்
முருகையா
வள்ளி மணவாளனுக்கு ஓம்
முருகையா
அழகு தமிழ் வேலனுக்கு ஓம்
முருகையா

பார்வதி மைந்தனே ஓம்
முருகையா
வேல் கொண்டு வினை தீர்ப்பாய் ஓம்
முருகையா
தேவ மொழி தெரிந்தவனே ஓம்
முருகையா
வேண்டும் வரம் தந்திடுவாய் ஓம்
முருகையா


ஆறுமுகக் கந்தனுக்கு ஓம்
முருகையா
ஆறுபடை வீடுடையாய் ஓம்
முருகையா
ஆனந்த ரூபனே ஓம்
முருகையா
அன்பாய் என்னைக் காத்திடுவாய் ஓம்
முருகையா

கந்தனுக்குக் காவடி ஓம்
முருகையா
கதிரனுக்குக் காவடி ஓம்
முருகையா
எங்கள் குல வேலனுக்கு ஓம்
முருகையா
ஏந்தும் வரம் தந்திடுவாய் ஓம்
முருகையா
ஆடி வரும் காவடி ஓம்
முருகையா
அசைந்து வரும் காவடி ஓம்
முருகையா
பக்தன் உனை நாடி வந்தேன் ஓம்
முருகையா
எந்தன் குறை தீர்த்து வைத்தாய் ஓம்
முருகையா

பு.ஜெனீஸ்குமார், கல்மடு
ஒளிச்சுடர் சிறுவர் கழகம்

# மாணவர்களும் இடைவிலகலும்

சமூகத்தின் வளர்ச்சிக்கு பொருளாதாரம் எவ்வாறு முக்கியமோ அவற்றை பெறுவதற்கு மிக முக்கியமானது கல்வி அந்தக்கல்வியை சிறுபராயத்திலிருந்தே ஒழுங்காக வழங்கப்பட



வேண்டும். பாடசாலையில் சேரும் பிள்ளைகள் முழுமையான கல்வியைப் பெறாது இடையில் பாடசாலையை விட்டு விலகல் இடைவிலகல் எனப்படும். இடைவிலகும் பிள்ளைகள் சமூகத்தில் காணப்படும் தீய சக்திகளினால் கவரப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன.

மாணவர்கள் இடைவிலகுவதற்கான காரணங்களாக பின்வருவன காணப்படுகின்றன. பொருளாதாரப் பிரச்சினை, பெற்றோர்களின் கவலையீனம், பரம்பரைத் தொழிலில் ஆர்வம் காட்டுகின்றமை, சாதிப் பாகுபாடு, இளம் வயதில் திருமணம் செய்தல், அதிபர்,ஆசிரியர்களின் பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகம், பாடசாலைகளின் இறுக்கமான நிர்வாகம், சூழலின் தாக்கம்,

வெளிநாட்டு மோகம், சிறு குழந்தைகளைப் பராமரித்தல், பாடசாலைகள் மாணவர்களை ஊக்குவிக்காமை, பாடசாலைக்கும் பெற்றோருக்குமிடையே தொடர்பு குறைவாகக் காணப்படல், முன்பள்ளிக் கல்வி குறைவாகவும் ஒழுங்கான முறையிலும் இல்லாமை, ஆசிரியர் வளப்பற்றாக்குறை போன்றன காணப்படுகின்றன.

## இடைவிலகலுக்கான பொதுவான சில காரணிகளும் தீர்வுகளும்

1. பொருளாதாரப் பிரச்சினை



கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அன்றாட நாளாந்த அடிப்படைத் தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடிவதில்லை. அத்துடன் உடலை வருத்தி வேலை செய்யும் தொழிலாளர்கள் உடல் வருத்தத்திற்கு என்ற போர்வையில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியினை மது அருந்துவதற்காக செலவிடுகின்றனர். அத்துடன் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமித்து

தங்கள் குழந்தைகளின் எதிர்கால நலனுக்கு பாவிப்பதற்கு நினைப்பதில்லை. மேலும் வேளாண்மைத் தொழில் செய்யும் பருவ காலங்களில் கிடைக்கும் வருமானத்தினை அக்காலத்திலேயே தேவையற்ற செலவுகளைச் செய்து செலவளித்து விடுவர். இந்நிலையில் தமது பிள்ளைகளுக்கு கல்விக்காக செலவிட முடியாமல் இருப்பர். இதனால் மாணவர்களும் தங்களது உணவு, பாடசாலை, உபகரணங்கள் போன்றவற்றை பெறமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டு கல்வியின் மேல் அக்கறை காட்டும் அளவினை குறைத்துபாடசாலையை விட்டு விலகுகின்றனர். இவ்வாறு விலகும் மாணவர்கள் விரும்பத்தகாத கூட்டதித்தினருடன் சேர்ந்து காலத்தை வீணடிப்பதுடன் எதிர்கால வாழ்க்கையை சீரற்ற நிலைக்கு தள்ளி விடுகின்றனர்.

தீர்வுகள்

விவசாயிகளுக்கும் மீன் பிடித் தொழிலாளர்களுக்கும், கூலித் தொழிலாளர் களுக்கும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி எடுத்துக் கூறி தமது வருமானத்தில் ஒரு பகுதியை நாளாந்தம் அல்லது வாராந்தம்

அல்லது மாதாந்தம் என்ற அடிப்படையில் சேமிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். அதற்கு சீட்டுப்பிடித்தல், வங்கி சேமிப்பு, காப்புறுதி திட்டம், ஓய்வூதியத்

திட்டம் என்பவற்றின் மூலம் சேமிக்க நடவடிக்கை எடுத்து வைத்தல் வேண்டும். மேலும் மதுபானம் அருந்துவதனால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறி அதற்காக செலவிடும் பணத்தினை பிள்ளைகளின் கல்விக்காக செலவிட வைத்தல் வேண்டும்.

மேலும் நிரந்தர வருமானத்தினைப் பெற்று பிள்ளைகளின் கல்விச் செலவினை ஈடுசெய்யும் வகையில் பருவகாலங்களில் கிடைக்கின்ற வருமானத்தில் ஒரு பகுதியை வங்கிகளில் சேமிப்பில் இடுவதன் மூலம் அல்லது சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் வட்டி, இலாபம் போன்ற வருமானங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் தங்கள் தேவைகளுடன் பிள்ளைகளின் தேவைகளையும் நிறைவேற்றி இடைவிலகலைக் குறைக்க முடியும். மற்றும் இப்பிரதேசத்தில் இயங்கும் உலக தரிசனம்

போன்ற நிறுவனங்களிடமும் பணம் படைத்த நபர்களிடமும் உதவி பெற்று மாணவர்களின் இடைவிலகலைக் குறைக்க பெற்றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. பெற்றோர்களின் கவலையீனம்




பெற்றோர்கள் கல்வியறிவின்மை காரணமாகவும், வறுமை காரணமாகவும், தங்கள் பிள்ளைகளின் மீது கவனம் செலுத்துவதில்லை. மாணவர்கள் பாடசாலைக்கு சென்று வருகின்ற வேளைகளில் அவர்களின் தேவைகளை மட்டும் கவனித்து வசித்து வருகின்றனர். சாதாரணமாகவே எழுத, வாசிக்கத் தெரிந்தால் மட்டும் போதுமானது என்று ஒரு சில பெற்றோர்கள் நினைத்து விடுகின்றனர். படித்தவர்கள் எல்லோருக்கும் அரசாங்கத் துறைகளில் வேலை கிடைப்பதில்லை. எனவே பிள்ளைகளை ஏன் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என நினைக்கும் பெற்றோர்களும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றனர்.

சுமார் 10 வீதமான மாணவர்கள் பெற்றோரின் கவலையீனம் காரணமாகவே இடை விலகுகின்றனர்.

தீர்வுகள்

கல்வியின் முக்கியத்துவம் பற்றி பெற்றோர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். கிராம சேவை உத்தியோகஸ்தர்கள். சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள். கிராம அபிவிருத்திச் சங்கத்தினர். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் போன்றோர் கல்வியின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூற வேண்டும். கல்வி என்பது ஒரு அழியாச் சொத்து எனவும் இது ஒரு நீண்டகால முதலீடு எனவும் படித்தவர்கள் எல்லோருக்கும் அரச உத்தியோகம் கிடைக்கும் என எதிர்பார்க்கக் கூடாது எனவும் எடுத்துக் கூற வேண்டும். 14 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட வயதினரே கூடுதலாக இடைவிலகுகின்றனர். எனவே இக்கால கட்டத்தில் பெற்றோர்களை கூடிய கவனம் எடுக்க வைக்க வேண்டும்.

## ௩.பரம்பரைத் தொழிலில் ஆர்வம் காட்டல்.



மீன்பிடித் தொழில் விவசாயம். நகை வேலை போன்ற தொழில்கள் பரம்பரைத் தொழிலாக காணப்படுகின்றன. மாணவர்கள் பாடசாலை செல்வதில் அக்கறை காட்டாமல் தொழிலில் ஈடுபடுகின்றனர். ஓந்தாச்சிமடம் பாடசாலையை எடுத்துக் கொண்டால் இடைவிலகுவோரில் 75 வீதமானவர்கள் ஆண்களாகக் காணப்படுகின்றனர். படிப்பதை விட இவற்றை செய்வது நல்லது என மாணவர்கள் இடைவிலகுகின்றனர்.

### தீர்வுகள்

பரம்பரைத் தொழிலைச் செய்வதற்காக இடைவிலகும் மாணவர்களுக்கு பாடசாலை மூலமும் பெற்றோர்களும் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துக் கூற வேண்டும். அத்துடன் கற்கும் வேளையில் தொழில் செய்யும் வல்லமையை ஏற்படுத்த வேண்டும். மாலை நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் வேலை செய்யக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

## 4. இளம் வயதில் திருமணம் செய்தல்

பாடசாலை மாணவர்களும் மாணவிகளும் திருமணம் முடிப்பதற்காகவும் இடைவிலகுகின்றனர். குறிப்பாக 14 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட மாணவிகள் திருமணம் முடிப்பதனால் இடைவிலகுகின்றனர். இவ்வாறு அவர்கள் இளவயதில் திருமணம் முடிப்பதற்கு பெற்றோர்களும், மூத்த சகோதரர்களும் ஒரு வகையில் காரணமாகின்றனர். இதனால் கல்வி கற்கும் வாய்ப்பு குறைவதுடன் கல்வி அறிவற்ற சமூகம் தோன்றவும் காரணமாக அமைகின்றது.



மேலும் திருமணம் முடிக்கும் நோக்கத்துடன் அல்லாது முறையற்ற பாலியல் நடத்தைக்கு உட்பட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் திருமணம் முடிக்க வேண்டிய அல்லது தனிமையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டோ இடைவிலக வேண்டி ஏற்படல். இதன் காரணமாக இளமையான வயதில் திருமணம் முடிப்பதினால் சிறிய வயதில் பெற்றோராகி வாழ்க்கையை நடாத்த முடியாமல் பொருளாதார கஸ்ரங்களுக்கும் மற்றோர்களால் மதிக்கப்படாமலும் முகம் கொடுத்து வாழ வேண்டி ஏற்படுகின்றது.


தீர்வுகள்

கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் சிறு வயதில் திருமணம் முடிப்பதால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் பெற்றோரும்இ ஆசிரியர்களும் எடுத்துக் கூற வேண்டும். முறையற்ற பாலியல் நடத்தையால் ஏற்படும் நோய்கள் பற்றியும் மாணவர்களுக்கு விளக்க வேண்டும்.

பெற்றோர்கள் வீடுகளில் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும்.

5. அதிபர், ஆசிரியர்களின் பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகம்

அதிபர், ஆசிரியர்கள் சிலர் மாணவர்களுடன் அன்பாகப் பழகாமல் பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகங் களையும் பொருத்த மற்ற தண்டனை களையும்



மாணவர்களுக்கு வழங்குவதனால் மாணவர்கள் இடைவிலகுகின்றனர். குறிப்பாக 14 தொடக்கம் 16 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் இடைவிலக காரணமாகின்றது. பெண் மாணவிகளிடம் ஆண் ஆசிரியர்கள் பொருத்தமற்ற வினாக்களை கேட்கும் பொழுது அதனை சகித்துக் கொள்ள முடியாமல் இக்கிராமப்புற பெண் மாணவிகள் இடைவிலகுகின்றனர். இத்தகைய மாணவர்கள் சமூகத்தில் விரக்தி அடைந்தவர்களாக காணப்படுகின்றனர்.

தீர்வுகள்

அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுடன் அன்பாகப் பழக வேண்டும். பொருத்தமற்ற தண்டனைகளை வழங்காமல் மாணவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தண்டனைகளை வழங்க வேண்டும். பெண் மாணவிகளிடம் ஆண் ஆசிரியர்கள் பொருத்தமற்ற வினாக்களைக் கேட்பது தவிர்த்துக் கொள்ள வேண்டும். மாணவர்களை ஆண் ஆசிரியர்களும் மாணவிகளை பெண் ஆசிரியர்களும்

ஒழுக்கம் சார்பான நடவடிக்கைகளை கவனித்தல் வேண்டும். இதன் மூலம் இடைவிலகலைக் குறைத்து நற்பிரஜைகளை உருவாக்கலாம்.

6.பாடசாலைகள் மாணவர்களை ஊக்குவிக்காமை

பாடசாலைகளுக்கு மாணவர்கள் கல்வியை மட்டும் பெறுவதற்காக அல்லாமல் விளையாட்டு. கலை ஆற்றல், ஒழுக்கம் போன்ற பல்வேறு விடயங்களையும் பெறுவதற்காகவே வருகின்றனர். எந்தவொரு விடயத்திலும் ஊக்குவித்தல் அவசியமாகும். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்காமையும் இடைவிலக காரணமாகும். இவ்வாறான ஊக்குவிப்புக்கள் இல்லாமை காரணமாகவும் மாணவர்கள் இடைவிலகுகின்றனர்.

தீர்வுகள்

பாடசாலைகளில் வகுப்பு ரீதியாக மாதாந்தமாகவோ, ஒரு தவணைக்கு ஒரு தடவையாகவோ மாணவர்களுக்கு ஊக்கம் அளித்து பரிசில்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பாடசாலை ரீதியாக வருடாந்த விளையாட்டுப் போட்டி. பரிசளிப்பு விழா போன்றவற்றை நடாத்தி பரிசில்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பரிசளிப்பு விழாவில் பாட ரீதியாக புள்ளிகளை கூடுதலாக எடுத்த மாணவர்களுக்கும். ஒழுக்கத்தை கடைப்பிடித்த மாணவர்களுக்கும். தொடர்ந்து பாடசாலைக்கு வருகை

தந்த மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்க வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் இடைவிலகலைக் குறைத்து எதிர்கால வாழ்க்கையை வளப்படுத்த முடியும்.

எனவே இன்றைய கால கட்டத்தில் நவீனத்துவம் அடைந்து வருவதும் இடைவிலகலில் தாக்கம் செலுத்துகின்ற அதே நேரம் எமது பிரதேசங்களில் வரவு குறைந்த மாணவர்கள், ஒழுங்கீன மாணவர்கள் காணப்படுவது எதிர்காலத்தில் இடைவிலகள் மாணவர்கள் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்துவிடும். இது தொர்பாக சமூகத்தில் உள்ள நபர்கள் ஒவ்வொருவரும் சிந்தித்து நாளைய தலைவர்களான சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அ.அழகுராஜ்,
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,கோறளைப்பற்று,வாழைச்சேனை.

# ஆசிரியர்கள் மாணவர்களைப் புரிந்துகொள்வதின் முக்கியத்துவமும், வகுப்பறை வன்முறையும்

திரு.ர.விக்னேஸ்வரன் (MA, BA, LLB(R) & Dip in Eng)

(நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புசேவைகள் உத்தியோகத்தர்,கோறளைப்பற்று,வாழைச்சேனை)

பாடசாலைகள் அச்சம் நிறைந்து கிடக்கும் தண்டனைக்



கூடங்களாகி வெகு காலமாகின்றன. "அடியாத மாடு படியாது" என்ற நம்பிக்கையே நமது பாடசாலைகளை இயக்கும் கல்விச் சித்தாந்தம் குழந்தைகள் மாடுகளா? மாடுகளும் வதைக்கப்படலாமா? படிப்பதுதான் கல்வியா? அப்படிப்படிப்பதற்கு அடி தேவையா?வகுப்பறை உறவுகள் அதிகார உறவுகள், அதில் சிக்கிக் கொண்ட வாயற்ற ஜீவன்கள் குழந்தைகள். அதிகார உறவுகளாகி விட்ட வகுப்பறை உறவுகளில் குழந்தைகள் படும்வதை சொல்லித் தீராதது.


நமது கல்வி முறையில் பல்வேறு கேவலங்களில் ஒன்று Corporal Punishment உடல்- மன ரீதியாக மாணவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனை. கற்பித்தலின் தவிர்க்க முடியாத தொழில் தர்மமாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. பெரும்பாலான பள்ளிகளில் பெரும்பாலான மாணவர்கள் நாள்தோறும் அனுபவித்து மரத்துப் போனவிஷயம் தான். இது சமீபத்தில் எமது பகுதிகளில் விவாதப் பொருளாகியிருக்கிறது.சமீப காலமாகத் தொடர்ந்து பாடசாலைகளில் பல்வேறு அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பல சேவை நிறுவனங்களின் ஆய்வுகள், விசாரணைகள் மூலம் சமீபத்தில் நடத்திய பொது விசாரணைகள் நெஞ்சை உருக்குவதாக இருந்தது. குழந்தைகளுக்குப் பள்ளிகளில் அளிக்கப்படும் பல தண்டனைகள் "சித்திரவதை" என்ற வரையறைக்குள் கொண்டு வரப்படவேண்டும் என்ற குறிக்கோளுடன் சர்வதேச சித்திர வதைத் தடுப்பு நாளாகிய ஜூன் 26ம்நாள் அன்றும் பலசேவை நிறுவனங்கள் இந்த குற்றங்களை மக்கள் முன்வைக்க தொடங்கியுள்ளன. மேலே குறிப்பிட்ட நிகழ்வுகளிலும் வெளிவந்தவை ஒருசிலவே ஆனால், வெளி வராமல் புதைக்கப்பட்டவை ஏராளம்.

தங்களின் இயற்கையான இயலாமையாலும், குற்றம் புரிந்தவர்கள் வயதில் மூத்தவர்கள், அதிகாரம்

உடையவர்கள் என்பதாலும், அவர்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து பெற்றோர்களிடமும் சொல்லாமல் நினைவும் நாவும், உறைந்து போன குழந்தைகள். இத்துடன் அடியும் உதையும் இல்லாவிட்டால் குழந்தைகள் உருப்படமாட்டார்கள். என்ற பரவலான நம்பிக்கை காரணமாகப் பெற்றோர்கள் பாடசாலைகளுக்குக் கொடுத்திருக்கும் வதைப்பதற்கான Blank Cheque ஆகியவையும் குற்றங்கள் வெளி வராததன் காரணங்கள்.

குழந்தைகளை வதைப்பதில் தான் எத்தனை விதம்? அதில் குழந்தைகள் அனுபவிக்கும் வேதனைகள் எத்தனை வகை? இவற்றில் ஒரு குறிப்பிட்ட வகை குழந்தைகள் சந்திக்கும் பாலியல் பலாத்காரங்கள். பாடசாலையில் நடக்கும் பாலியல் விஷமங்கள், சில்மிஷங்கள், சிண்டல்கள், பலாத்காரங்கள் பெரும்பாலும் வெளி வருவதேயில்லை. குற்றவாளிகள் பெரும்பாலும் ஆசிரியர்தான். பரிசோதனைக் கூடங்களின் ஒதுக்குப்புறங்களில் மாலை நேர ஸ்பெஷல்க்ளாசில் பல்வேறு அத்துமீறல்கள் நடப்பதாகக் கேள்விப்படுகிறோம். குழந்தைகளின் தற்கொலை போன்று பெரும் துயரச் சம்பவங்கள் ஏற்பட்டால் மட்டுமே இவை வெளிவருகின்றன. மேலே குறிப்பிட்ட ஒரு கொடுமையில் மாணவியை பரிசோதனை செய்தபொழுதுதான் அவள் கர்ப்பமாக இருந்தாள்

என்பதே தங்களுக்குத் தெரியவந்தது என்று பெற்றோர் சொல்லியிருக்கின்றனர்.



இவ்வாறு வெளி வராததற்குக் காரணம் காண ஆய்வு தேவையில்லை. நமது ஆண் ஆதிக்க சமுதாயத்தில் இளம்பெண்களின் உடலில் ஏற்படும் எந்த விபத்தும் வெளியில் தெரிந்துவிட்டால் விளைவைச் சந்திக்கவேண்டியது பெண்தான் அவளுக்கு திருமணவாய்ப்புகள் அற்றுப்போகின்றன. திருமணத்தைத் தவிர பெண்ணுக்கு வேறு கதியும் நம் சமுதாயம் விதிக்கவில்லை. இந்தக் கதியற்ற நிலைமையைத் தான் ஆசிரிய வக்கிரங்கள் பயன்படுத்திக் கொள்கின்றன.

தண்டனை என்ற பெயரில் நடக்கும் குரூரங்கள் ஏராளம். ஆசிரியரின் அன்றைய ஆத்திரத்தின் கொதிநிலை, கையில் கிடைக்கும் ஆயுதம், மாணவனின் பலவீனத்தைப் பற்றிய கணிப்பு, பள்ளியில் வெளியில் நிலவும் கேட்பாரற்ற சூழ்நிலை என்ற பல காரணிகள் தண்டனையின் தன்மையை நிர்ணயிக்கின்றன. ஏழு வயது மாணவனை வகுப்பறையில்



அடைத்து வைத்தமை மற்றும் பிஞ்சு உடலைப் புரட்டி புரட்டி அடித்ததில், உடலும் மனமும்


பாதிக்கப்பட்டு, குழந்தைகள் தொடர்ந்து படிக்க இயலாத நிலைக்கு ஆளானது, ஆசிரியர் அடித்த பொழுது ரூலர் குத்திக் குழந்தையின் கையில் காயம். இவை எமது விசாரணையில் வெளிவந்த சில கொடுமைகள். சரி. இந்த வன்முறைகளெல்லாம் சட்டத்திற்கு உட்பட்டவைதானா? இலங்கையின் தண்டனைக் கோவை சட்டங்களிற்கமைய பிள்ளைகளை அடித்து துன்புறுத்துவது அல்லது உடல் ரீதியான தண்டனைகளை வழங்குவது குற்றமாகும். இது ஒரு வகையில் உடல் மற்றும் உள ரீதியான துஸ்பிரயோகமாகும். இவற்றிற்கு குற்றம் நிரூபிக்கப்பட்டால் சிறைத் தண்டனையுடன் தண்டப் பணமும் செலுத்த வேண்டும் என இலங்கையின் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்கு தண்டனை அளித்தல் ஐ.நா. சபையின் குழந்தை உரிமை சாசனத்திற்கு (United National convention on the Rights of the Child) முரணானது. இந்தசாசனத்தில் இலங்கை கையெழுத்திட்டிருப்பதால் அதனைக் கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு பாடசாலைகளில் நடக்கும் கொடூரங்களை நியாயப்படுத்தும் விதத்தில் இன்று சிலர் பேசுகின்றனர். இந்த பரிந்துரை மறுபரிசிலனை செய்யப்பட வேண்டியது அவசியம். ஆனால், சட்டங்களுக்கு அப்பால்.இந்தக் கொடூரங்களுக்குக் காரணமான

கல்விச் சூழலைப் புரிந்துகொள்ளவேண்டும். இருமட்டங்களில் நிலவுகின்ற கல்விச் சூழலைப் புரிந்து கொள்ள வேண்டும். அடிமட்டத்துக் குழந்தைகள் பயிலுகின்ற அரச பாடசாலைகள் ஒருபக்கமும், வசதிவாய்ந்த குழந்தைகள் கற்கின்ற பாடசாலைகள் மறுபக்கமுமாக பலமட்ட வர்க்கப்பிரிவு கொண்ட கல்வி அமைப்பைப் புரிந்து கொள்ளவேண்டும்.

பெரும்பாலான நாட்களில் அநேகமாக ஒருஆசிரியர் பல வகுப்புகளைச் சமாளிக்க வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது. மேலும் சில பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. அத்துடன், பாடச்சுமையோ நாளுக்கு நாள்கனத்துவருகிறது. அதிலும், ஆரம்ப கல்வி பெறும் குழந்தைகளால் கற்றுத் தேற இயலா வண்ணம் கனத்துக் கொண்டே வருகிறது பாடத்திட்டம். இந்நிலையில் ஆசிரியர் பிரம்பே உற்ற துணை என்று கருதுகிறார்.

இன்றைய உலகம் போட்டியில் கரையும் உலகம். மனிதனை மனிதன் விழுங்கும் கேவலமான போட்டிக்கு உயர் வர்க்கத்துக்கு ழந்தைகள் பிறந்தது முதல் தயாரிக்கப் படுகிறார்கள். சக மாணவனை எதிரியாகப்பார்த்து, அவனுடன் போட்டியிடும் போர்



தொடுக்கும் மனப்போக்கு சமுதாய நெறி வளர்க்கப்படுகிறது.

உலகை வெல்லும் உயர் வர்க்க பயணத்தைத் தொடர்ந்து. மூச்சைப் பிடித்துக்கொண்டுஓடும் நிலை இன்றைய பிள்ளைகளுக்கு ஏற்படுகிறது. இந்த நிர்ப்பந்தங்களில் வார்க்கப்படும் பாடத்திட்டம் பாவப்பட்ட குழந்தைகளுக்கு ஏம்பி ஏம்பிக் குதித்தாலும் எட்டாத உயரம் எட்ட வைத்தே தீரவேண்டிய கட்டாயம் ஆசிரியருக்கு. கண்மூடித்தனமாக அடித்தேனும். நாவினால் சுட்டேனும் எட்டவைக்க வேண்டியகட்டாயம் ஆசிரியரின் அரக்கத் தனங்களை நியாயப்படுத்தவில்லை. பிரச்சினையின் பின்புலம் இது.

மேல்மட்ட குழந்தைகள் தண்டனைகளிலிருந்து தப்புகிறார்களா என்றால் நிச்சயம் இல்லை. வசதி படைத்த செல்லக் குழந்தைகளாக அவதரித்திருக்கும் இவர்களும்பலதண்டனைகளுக்கு. வன்முறைகளுக்கு இலக்காகின்றனர். காரணம் பெற்றோர்களின் வானுயரக் கனவுகளை நிஜமாக்குவது இவர்களது பிறவிப்பயன். இந்தக் குழந்தைகளின் வாழ்க்கையே செல்வாக்கு மிகுந்த பாடசாலைகளில் இடம்பிடிப்பது. புள்ளிகள்(Marks), முதல்நிலைகள் (Rank) இவற்றிற்கான ட்யூஷன். கோச்சிங்கிளாஸ் இவை அனைத்திலும் இடையறாதபோட்டி. தங்கள். குழந்தைகள் முதல்

பரிசுகளைத் தட்டிக் கொண்டு போவதற்காகப் பெற்றோர் செய்யும்தவம். தாய்மார்கள் நோற்கும் நோன்புகள். இவற்றில் பெரும் வெற்றிதரும் சமுதாய மதிப்பு... இதுவே அவர்கள் உலகம். இதில் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனைகள். புண்படுத்தல்கள். அவமானங்கள் பாடசாலைகளின் தரத்திற்கான ஒரே அளவுகோல். எத்தனை மாணவர் மருத்துவ பொறியியல் கல்லூரி நுழைவுத் தேர்வில் நல்லராங்க் பெற்றார்கள் என்ற ஒன்றே. வினோதமான பாடசாலைகளெல்லாம் முளைத்திருக்கின்றன. இங்கு நடப்பதுகற்பித்தல் அல்ல. Teaching அல்ல. Coaching. மாணவர்கள் வாட்டி வதைக்கப்படுகின்றனர். அளிக்கப்படும் தண்டனைகள் வெளிவராமல் அமுக்கப்படுகின்றன. இங்கு கொண்டு போய் சேர்த்து விட்டால் பெற்றோருக்குப் பெரும் நிம்மதி. மகன் எப்படியாவது நல்லராங்க் வாங்கி விடுவான். அவன் உடலும் மனமும் ரணமானால்தான் என்ன!

கல்விச்சூழலின் இந்தச் சிரழிவுக்கு ஒரு முக்கியகாரணம் வாய்ப்பளிக்கும் கல்வி ஒருசிலருக்கே உரியதாகக் குறுகிவிட்டது. போட்டிவலுத்துவிட்டது. இடைவெளி பெருகிவிட்டது. சமுதாயபிரமிடின் உச்சிகூர்ந்து. அடித்தளம் பரந்துகிடக்கிறது.உச்சியின் நுழைவாயிலைக் காவல்காக்கும் பூதம் காவு கேட்கிறது. குழந்தைகளும்

இளைஞர்களும் பலியாகின்றனர். உச்சியை எட்டிவிட்டவன் உலகாள்கிறான். சிலிகான் வாலியும் நம் நாட்டில் கால்பதித்து விட்டபன்னாட்டு நிறுவனங்களும் வெற்றிவீரனைத் தழுவிக் கொள்ளக் காத்திருக்கின்றன. அங்கு அவனது ஒருநாள் வருமானம் சராசரி நபரின் ஓராண்டு வருமானத்திற்கும் அதிகம்.

இந்த வாழ்க்கைப் பயணம் வன்முறைப்பயணம். பெரும்பாலானவரைத் தகுதியற்றவர் என்ற முத்திரை குத்தி.பாதையிலிருந்து பாதாளத்தில் தள்ளி விடும் பயணம். இந்த வன்முறை வகுப்பறையிலும் பிரதிபலிக்கிறது. ஒரு நாட்டின் தலைவிதி அதன் வகுப்பறையில் நிர்ணயிக்கப்படுகிறதாம். இதோ நாட்டின் தலைவிதி. வகுப்பறையின் தலை விதி.

ஆகவே இன்றைய பிள்ளைகள் நாளைய தலைவர்கள் என்று நாம் கூறுகின்றோம். ஆனால் அவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் அடிப்பதும் துன்புறுத்துவதாலும் வளர்ந்தவர் தமது விடயங்களை செய்ய முயல்வது வன்முறை நிறைந்த பிள்ளைகள் கொண்ட சமுதாயத்தை உருவாக்க ஏதுவாக அமைந்துவிடும். ஆகவே இது தொடர்பான துறையில் இருப்பவர்கள் இவற்றை சற்று சிந்தித்து பிள்ளைகளை புரிந்து கொள்வதுடன் அவர்களுடன் இதயபூர்வமான இணைப்பை ஏற்படுத்துவதுடன் வன்முறை சாராத தொடர்பாடலை பேணுவதன் மூலம் ஆரோக்கியமான, சிறந்த நற்பிரஜைகளை எதிர்காலத்தில் உருவாக்கலாம் என்பது திண்ணம்

# முதியோர்

அறிவுக் களஞ்சியம் முதியோர்
ஆற்றலின் முழுமை முதியோர்
பழமையில் அமிழ்ந்தோர் முதியோர்
பாசத்திற்கு அடிமையும் முதியோர்..

புதியதும் ஓர்நாள் பழமையாகும்
பூவும் ஓர்நாள் பிஞ்சாக மாறும்
பிஞ்சும் ஓர்நாள் காயாகும்
காயே முடிவில் கனியாகும்..

கனியின் கனவு காயில்லை
காயின் இனிமை பிஞ்சிலும் இல்லை
பிஞ்சின் தன்மை பூவிலும் இல்லை
புதுமை என்ன தெரியுமா?
பூவே கனியாவதுதான்..

இன்றைய பூவே
நாளைய கனி
இன்றைய சிறுவரே
நாளைய முதியோர்..

உண்மை நிலைமை
உணர்வீராயின்
உதாசீனம் செய்யாமல்
உயர்த்திடுவீர் முதியோரை..

இல்லங்களில் சேர்த்து
இளக்காரம் செய்யாமல்
என்றும் காத்திடுவீர்
எமது அருமைப் பொக்கிசமாய்..

தொகுப்பு: **நோஜிதா,** 09C, கும்புறுமூலை வெம்பு,
கிரான்

## தாவரங்களின் தாவரவியல் பெயர்

1. Acalypha paniculata - குப்பைமேனி
2. Adadhoda vasika - ஆடாதோடை
3. Aloevera linn - கற்றாளை
4. Amaranthes blitus - முளைக்கீரை
5. Calophyllum Irophyllum linn - புன்னை
6. Cardiospermum helicacabum linn- முடக்கொத்தான்
7. Centella asiatica - வல்லாரை
8. Coleus aromaticos - கற்பூரவள்ளி
9. Diospyros ebenum - கருங்காலி
10. Euphorbia antignorum linn - சதுரக்கள்ளி
11. Artocarpus integrifolia linn - பலா
12. Citrus acidia roxb - எலுமிச்சை
13. Cyamopsis psoralioides dc - கொத்தவரை
14. Curcuma longa linn - மஞ்சள்
15. Cocos nucifere linn - தேங்காய், தெங்கு
16. Elletaria cardamomum maton - ஏலம்
17. Dolichos tranquebaricus - பயற்றங்காய்
18. Ferula asafetida linn - பெருங்காயம்
19. Feronia elephantum correa - விளாம்பழம்
20. Euphorbia tirucalli linn - கள்ளி



த.கோகிலவதனி, யோ.தர்சிக்கா,
இளம்தளிர் சிறுவர் கழகம்,
சுங்காங்கேணி.

# ஏக்கம்

சுமையைச் சுகமாக நினைத்து — நீ
விண்ணில் ஏற்றி வைத்த தீபமே நான்...!
அழுவது எதற்கென்று உணர்ந்தேன்
அமுதப் பாலூட்டி தூங்க வைத்த
ஆருயிர் தாயை நினைத்தால்...!

வண்ணத்துப் பூச்சியின் பிரிவு — அதன்
கண்களுக்குத் தெரியும்
என் பெற்றோரின் இழப்பு — என்
மனசுக்குத்தான் தெரியும்...


என் வாழ்வு பூங்காற்றாய் - என்னருகில்
தாய், தந்தை இருக்கும் போது
என் வாழ்வு பாலைவனமாய் - என்னருகில்
தாய், தந்தை இல்லாத போது...

தாய், தந்தையாய் இன்ப மழையில்
குதூகலமாய் நானிருக்கையில்
எமதர்மர் 'சுனாமி' எனும் பெயர் தாங்கி
என் பெற்றோரை அள்ளிய அவலம்
கண்டேன்...

அன்பின் உறைவிடமாய் தாய்
அறிவின் புகழிடமாய் தந்தை
என்று என் வாழ்வில் - அன்று
அன்பின், அறிவின் அரவணைப்பில் நானிருந்தேன்...!
இன்று அவர்கள் மடியில் இன்னுமொருமுறை
உறங்கஆசைதான் - ஆனால்
இன்று நானோ யாருமற்ற
அநாதையாக இருக்கின்றேனே...!

S.கிறேக்ஷியா, கருங்காலிச்சோலை தீபச்சுடர் கழகம்

# நட்பு



தனிமையில் வாடியிருந்த எனக்கு
உன்னோடு கிடைத்த நட்பு
நெஞ்சத்தை விட்டு நீங்காபத நினைவு வலைகள்.


மனிதன் என்றாலேவெறுத்திருந்த எனக்கு
நிலாவுடன் பழகும் வாய்ப்பு
கிட்டயது – எனக்கு
மாதாவையும் பிதாவையும் விட்டால்
ஆறுதல் கூற அவனியில் யாரும் இல்லை
தாழத்தில் முத்தெடுப்பதுபோல
மனதில் உதித்தது உன் நட்பு
மட்டுமே தோழி...!

உன்னைப் படைத்த இறைவனுக்கு
தலை குனிவேனோ
இந்த உலகத்தில் ஈன்ற அன்னைக்கு
அடிபணிவேனோ
ஜோடியாய்த் திரிவதைவிட பாச மலராய்
இருப்பது நல்லது என்று கூறி உன்
நட்பு வார்த்தை மலையில் பதித்த காலடியில்
நம் நட்பு எப்போ பகிரிகிறதோ அன்று
என் உயிரும் உடலை விட்டுப் பிரியும் தோழி...!

கோ.ருஷானி,
தீபச்சுடர் கழகம்,
கருங்காலிச்சோலை.

# நினைவுகள் - மனதின் சிற்பங்கள்

பள்ளிக்கூடப்
பருவமது
பட்டாம் பூச்சியாய்
பறந்து திரிந்து
பருவ மழையில் நனைந்து
சேறோடு சுரியுமாய்
வீடு வந்த காலங்கள்
என் சிரைதந்து போன மனதின்
சிறைப்பிடித்த சிற்பங்கள்



ஆ.கஜானந்,தரம் - 5C,
மட்/வாழைச்சேனைஇந்துக் கல்லூரி.

## காலம் வரும்

அநாதை என்னும் மூன்றெழுத்து
அகராதியில் அழிந்துவிட
எவறெஸ்டில் ஏறாவிடின்..
கல்விச் சிகரத்தில் ஏறிவிடும்
காலம் வரும்
சிறுவர் இல்லத்து
சிறகொடிந்த சிட்டுக்கு......

ஆ.கஜானந்,தரம் - 5C,
மட்/வாழைச்சேனைஇந்துக் கல்லூரி.

## Time

Time is gold
Do not waste time
You cannot take time back
Time taken for the journey is too long.

| | |
|---|---|
| 60 Seconds | - 1 Minute |
| 60 Minutes | - 1 Hour |
| 24 Hours | - 1 day |
| 7 Days | - 1 Weeks |
| 4 Weeks | - 1Month |
| 12 Months | - 1 Year |
| 366 Days | - 1 Leap year |

**N.Anuja,**
Teepamalar siruvar kalakam,
Kannakipuram, Valaichenai


## உலக நாடுகளின் சுதந்திர தினம்.

| | | |
|---|---|---|
| 1. | கனடா | - ஜனவரி 4ம் திகதி |
| 2. | பர்மா | - ஜனவரி 4ம் திகதி |
| 3. | அவுஸ்ரேலியா | - ஜனவரி 4ம் திகதி |
| 4. | இலங்கை | - பெப்ரவரி 4ம் திகதி |
| 5. | இத்தாலி | - மார்ச் 2ம் திகதி |
| 6. | கிறீஸ் | - மார்ச் 25ம் திகதி |
| 7. | ஜப்பான் | - ஏப்ரல் 10ம் திகதி |
| 8. | நோர்வே | - மே 17ம் திகதி |

9. தாய்லாந்து - ஜூன் 24ம் திகதி
10. பாக்கிஸ்தான் - ஆகஸ்ட் 14ம் திகதி
11. இந்தியா - ஆகஸ்ட் 15ம் திகதி
12. மெக்சிக்கோ - செப்டெம்பர் 16ம் திகதி
13. சீனா - ஒக்டோபர் 16ம் திகதி
14. துருக்கி - நவம்பர் 01ம் திகதி
15. பின்லாந்து - டிசம்பர் 6ம் திகதி

நி.அனுயா,
தீபமலர் சிறுவர் கழகம்,
கண்ணகிபுரம்.

## ஆணும் பெண்ணும் சரிநிகர்



புதுயுகப் பெண்ணே — நீ
புதுமைகளின் படைப்பாளி
எதிலும் வெற்றி கொண்டு
எங்கும் நீ தளைத்திடுவாய்!

அகிலத்தைத் தாங்கிடும் - நீ
ஆன்மாவை ஈன்றெடுத்து
அன்பு மழை பொழியும்
அன்னையாகவும் மாறுகின்றாய்...

அடுப்பூதியது அந்தக் காலம்
அண்ட வெளியில் ஆராய்ச்சி செய்வது
அண்மைக் காலம்..

ஆண்தான் பெண்ணின் அச்சாணி
என்பது – அந்தக் காலம்
ஆணுக்கு சரிநிகர் - பெண்
என்பது இந்தக் காலம்..

புதுயுகம் படைக்கப்
புதுமைப் பெண்ணே – நீயும்
புறப்பட்டு விட்டால்
புதுமைகளும் மாறுதல்களும்
புவியில் நிச்சயம் உண்டு...

நி.தாட்ஷாயினி,
தீபமலர் சிறுவர் கழகம்,
கண்ணகிபுரம்.

# தோழியே!

என் அருமை உறவே
பாசமான தோழியே...!
பழகிப் பிரிந்து போகிறேன்
என் அன்பை மறந்திடாதீர்...!

காலங்கள் போடும் கோலங்கள்
கண்ணீர் சிந்தும் கவிதைகள்...
நிழலான என் நினைவுகள்- இன்று
நிஜமற்றுப் போய்விட்டன..

கண்கள் பேசும் மொழிகள்
என்றும் கனவாக மாறாது
உன்னைப் பிரியும் காலங்கள்
எனக்கு உயிரோடு கிடையாது..


பேச வார்த்தை இல்லை
தொடுவதற்கு உணர்வு இல்லை
நடமாடும் பிணமாக இன்று
திடமற்றுப் போகிறேன் நண்பியே...!
மீண்டும் ஒரு பிறப்பிருந்தால்
பள்ளித் தோழராய் பாதம் பதிப்போம்!
அதுவரை உனை நினைத்தபடி
எந்தன் உயிரும் உறவாடியபடி ..! தோழன்..

P.ஜந்தோஷ்,
தீபச்சுடர் கழகம், கருங்காலிச்சோலை

## சிறுவர் உலகம் ஒளி பெற...!

காற்றோடு தூசி போலக் கலந்து
விளையாடும் சிறுவர்கள் இவர்கள்
கவலை எனும் காரிருளை
அவர்களிடம் விதைத்திட
முனையாதீர்கள்..!

சுற்றித் திரியும் பறவைகள் போல
சுதந்திரமாய்த் திரிய விடுங்கள்
வசந்தமான வாழ்க்கைதனை – வாழும்
சிறுவர்கள் மார்பில்
துளி எனும் நீரை ஊற்றிடுங்கள்




நாளை அது நற்பயன் தர
அனைவரும் ஒளி கொடுங்கள்
வாசம் எனும் பூச் செடியை நட்டு
நாளை அது உயிர் பெற்று – எழ
ஒளி கொடுங்கள்...!

சிந்தனையின் பிறப்பிடமாகச் சிறுவர்கள்
நாளைய உலகின் தலைவர்கள்
அவர்கள் சிறுவர் உரிமைகள் என்று
உலகத்தில் இன்றும் திகழும்
சட்டங்களும் உண்டு!
நாளைய உலகம் எம் கையில்- மலர
அனைவரும் ஒளி கொடுங்கள்
சிறந்த ஒரு வாழ்க்கைதனை –
வழங்கிடுவோம்
அதுதான் நாளைய சிறுவர்களின்
வாழ்க்கையின் நல்லொளி!

**ச.சஷானந்தி,**
**கும்புறுமூலை, வெம்பு.**

# சிறுமியைக் காப்பாற்றிய நாய்



தாரணி என்னும் சிறுமி தனது வீட்டில் ஒரு நாய் வளர்த்து வந்தாள். அதன் பெயர் பப்பி ஆகும். தாரணி அதன்மேல் மிகவும் பாசமாக இருந்தாள். தாரணி தரம் இரண்டில் கல்வி கற்று வந்தாள். தாரணி எங்கு சென்றாலும் பப்பியும் அவளைப் பின்தொடர்ந்து செல்லும். அன்று ஒருநாள் தாரணியின் பெற்றோர் முக்கிய வேலை காரணமாக அவளை உறவினரின் வீட்டில் விட்டு விட்டுச் சென்றனர். அவளுடன் ஜிம்மியும் சென்றிருந்தது. உறவினர் வீட்டு முற்றத்தில் தாரணி தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். திடீரென அங்கே ஒரு நல்ல பாம்பு வந்துவிட்டது. அதைக் கண்டவுடன் மற்றப் பிள்ளைகள் ஓடிவிட்டனர். தாரணி மட்டும் பயத்தால் அழுது கொண்டேயிருந்தாள். இதைப் பார்த்த பப்பி அந்த நல்ல பாம்புடன் சண்டையிட்டு அதைக் கொன்றது. நாய் மட்டும் வராவிட்டால் தான் பாம்பினால் தீண்டப்பட்டு இருப்பேன் என்று உணர்ந்த தாரணி பப்பியை அன்புடன் அணைத்தாள். தனது பெற்றோர் வந்தவுடன் தனது பெற்றோரிடம் நடந்தவற்றைக் கூறினாள் தாரணி. தமது மகளைக் காப்பாற்றிய நாயை அவளது பெற்றோர் அன்புடன் அரவணைத்தனர்.

**நி.தரணிக்கா,**
தீபமலர் சிறுவர் கழகம்,
கண்ணகிபுரம், வாழைச்சேனை.

### நோய்களும் காரணிகளும்

| | | |
|---|---|---|
| 1. | மலேரியா | - நுளம்பு |
| 2. | யானைக்கால் | - நுளம்பு |
| 3. | மஞ்சள் காய்ச்சல் | - நுளம்பு |
| 4. | பிளேக் | - தெள்ளு |
| 5. | எயிட்ஸ் | - வைரசு |
| 6. | விசர்நாய் | - வைரசு |
| 7. | வயிற்றுளைவு | - ஈக்கள் |
| 8. | வாந்திபேதி | - ஈக்கள், நீர் |
| 9. | தடிமன் | - வைரசு |
| 10. | சார்ஸ் | - வைரசு |

கோ.ருஷானி,
தீபச்சுடர் சிறுவர் கழகம்,
கருங்காலிச்சோலை.

## WHAT IS CHILDREN?

C - Charact
H - Habits
I - Intelligent
L - Love
D - Duty
R - Responsibilities
E - Energy
N - Necessary

N.Tharanikka

## வெற்றிக்கான குணங்கள்

- நம்பகமாக நடந்து கொள்ளல்!
- நேர்மையுடன் இருத்தல்!
- எளிமையாக இருத்தல்!
- மரியாதையுடன் பழகுதல்!
- உலக ஞானம் பெற்றிருத்தல்!
- தாராள குணத்துடன் இருத்தல்!

நி.தரணிக்கா,
தீபமலர் சிறுவர் கழகம்,
கண்ணகிபுரம்.

## அன்னைமொழி

சி.சிந்துஜா,
கறுவாக்கேணி.

எங்கள் மொழி தமிழ் மொழி
இனிமையாகப் பேசும் மொழி
அன்னை சொல்லித்தந்த மொழி

பள்ளி சென்று படிக்கும் மொழி
பாட்டன் பாட்டி படித்த மொழி
பாலும் தேனும் போலவே

படிக்க இனிக்கும் தமிழ் மொழி...

திரைகடல் பல தாண்டியும்
தித்திப்பூட்டும் தேன் மொழி
எங்கள் மொழி தமிழ் மொழி

எல்லோருமே விரும்பும் மொழி...


## துண்டுப்பிரசுரம்

**சூழலைப் பாதுகாத்தல்**

சூழல் என்பது எம்மைச் சுழவுள்ள உயிருள்ளவையும், உயிரற்றவையும் ஆகும். இதனைப் பாதுகாப்பது பொதுமக்களின் கடமையாகும். இது பாதுகாக்கப்படாதவிடத்து மக்களுக்கே நோய், பிணி என்பன ஏற்படும். எனவே ஒவ்வொருவரும் தங்களது சூழலைப் பாதுகாத்து பாதுகாப்பாக சமுகத்தை உருவாக்க வேண்டும்.

ப.கோபிகா,தரம் -08A

## அகம்பாவம் மிக்க குதிரை




விவசாயி ஒருவனிடம் ஒரு குதிரையும், ஒரு கழுதையும் இருந்தது. குதிரை விவசாயியையும், கழுதை பொதிகளையும் சுமப்பது வழக்கம். ஒரு முறை கழுதைக்குப் பொதி சற்று அதிகமாகி விட்டது. அது குதிரையிடம் நண்பா இன்று ஒரு நாள் மட்டும் நீ என் சுமையில் பாதியைப் பகிர்ந்து கொள்ளேன் என்றது. அதற்கு அந்தக் குதிரை பொதி சுமப்பது உன் வேலை. நான் எதற்குப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று மறுத்து விட்டது.

சிறிது நேரம் கூடத் தாண்டவில்லை, கழுதை சுமை தாங்காமல் சாய்ந்து விட்டது. இதைக் கண்ட விவசாயி கழுதையின் மேல் இரக்கம் கொண்டு பொதி அனைத்தையும் அகற்றி குதிரையின் மேல் ஏற்றிவிட்டான். அப்பொழுதே கழுதை சொல்வதைக் கேட்டிருந்தால் இதில் பாதியைத்தானே நான் சுமப்பேன் என்று நினைத்து வருந்தியவாறே குதிரை பொதியைச் சுமந்து சென்றது.

**"அகம்பாவம் வீழ்ச்சியைத் தரும்"**

**த.நிலுஜினி**, தரம் - 09A,

அறிவொளி சிறுவர் கழகம்,
கிண்ணையடி



# ஒரு பட்டமரம் துளிர்க்கிறது

குதூகலிக்கும் குழந்தைப்
பருவத்தில்
குழம்பிய குட்டையாய்
இனிமை தரும் வாழ்க்கையே
இன்பங்களின் சங்கமமாய்
எனக்கொரு காலம் -இனி
என்று வரும் என
ஏங்கிய மனசும்....

பட்டமரமாய் விட்டெறிந்திட்ட
பாவை இவளின் பாதி வாழ்க்கை நகர்ந்தாலும்
தன்னம்பிக்கை ஆயுதத்தைப் பாலமாக்கி
தனிமையிலும் தடை தாண்டும்
விடா முயற்சியை தன் வசமாக்கி
தனக்கென ஓர் இடத்தை
தடம் பதித்து
சமுதாயப் பார்வையிலே
களைத்திடா மங்கை இவள்
துளிர்விடும் எதிர்கால
நிழல்தரு விருட்சமாக...!

**எம்.கஜானந், தரம்- 5C**
மட்/ வாழைச்சேனை இந்தக்கல்லூரி



தாய், தந்தையை இளந்த தம்பி தங்கைக்கு
தாயாகித் தவிக்கின்ற ஒரு பிஞ்சு உள்ளத்து சுமை தாங்கிக்கு ஓர் ஆறுதலாய்.....

- தம்பி தங்கைக்கு
  தாயாகித் தவிக்கின்ற பச்சைக்கிளி
  உன் பிஞ்சு உள்ளம்
  புரியவில்லை மானிடர்க்கு..!

- வானவில் ஒன்று பல வர்ணத்தோடு
  உன் வாழ்வு இன்று பல கோலத்தோடு
  பாதை மாறிச் சென்று விடாதே...!
  பரிதவித்துப் போவார்கள்
  உன் உடன் பிறப்புக்கள்

- தவிக்கின்ற உன் மனதை
  தம்பி தங்கையுடன் மழலை
  மொழி பேசி
  மகிழ்வுடன் நீ வாழ்ந்திடும் காலம்
  வெகு தூரம் இல்லையடி
  கலங்காதே கண்மணியே..!

# அமுதவாக்கு

## ஆசைகளை முறைப்படுத்துங்கள்

❖ நம்முடைய மனம் சில நிமிடங்களுக்குள் நூற்றுக்கணக்கான ஆசைகளை நினைக்க வல்லது. ஆனால் அவற்றில் ஒரு சில ஆசைகளை நம்முடைய உடம்பால் ஏற்றுச் சமாளிக்க முடியாது. சில விருப்பங்களை நிறைவேற்றுவதற்குப் போதுமான வாய்ப்பும் நமக்குக் கிடைப்பதில்லை.

❖ ஆசைகளை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு அவை நிறைவேறாமல்ப் போகும் போது நாம் ஏமாற்றத்தில் ஆழ்ந்து விடுவோம். இப்படி மனதைக் கீழ்நிலைக்குச் செல்லாமல் பக்குவப்படுத்த நம்மை தயார் செய்ய வேண்டும். ஆசைகளைக் குறைத்துக் கொள்வது அல்லது கட்டுப்படுத்திக் கொள்வது மட்டுமே இதற்கு முதல் படியாக அமையும்.

❖ முதலில் நாம் எண்ணும் ஆசைகள் நம் நிலைக்கு பொருத்தமானவையாகவும் மன அமைதியைக் கெடுக்காதவகையிலும் அமைவது அவசியம். இரண்டாவதாக நம் ஆசைகள் பிறரைப் பாதிக்காத வகையிலும் அமைய வேண்டும். மூன்றாவதாக இயற்கை

நியதிகளை ஓட்டியதாக ஆசை இருத்தல் வேண்டும்.

❖ இயற்கையின் ஒழுங்குக்கு மீறிய எண்ணங்கள் நிச்சயமாக நம்மைத் தண்டித்து விடும். இப்படி ஆசைகளைப் முறைப்படுத்தி விட்டால் நாம் நலமுடன் வாழலாம். பரலோகத்திலும் நன்மைகளைப் பெறலாம்.

**கிறிஸ்றிவாணி, தரம் - 8**
அறிவொளி சிறுவர் கழகம்
கிண்ணையடி, வாழைச்சேனை.

## கடிக் கேள்விகள்?????

01. கேள்வி : ஒரு காளை மாடு உள்ளது. அது எனது வீட்டுப் பக்கம் தலையையும் எனது நண்பனின் வீட்டுப்பக்கம் வால் பக்கத்தையும் வைத்திருக்கின்றது. எனவே இக்காளை மாட்டின் பால் யாருக்குச் சொந்தம். எனக்கா? நண்பனுக்கா?

பதில் : "காளை மாடு பால் தராதே!

ஆ..... ஆ.....

02. கேள்வி : வாழைப்பழத் தோலுக்கும். சீப்புக்கும் என்ன வித்தியாசம்? அல்லது என்ன ஒற்றுமை.

பதில் : "வாழைப்பழத் தோல்
காலைவாரும்"
"சீப்புத் தலையை வாரும்"

03. கோள்வி: நாக்கில்லாத மனிதர் விழியில்லாத நபருக்கு எவ்வாறு செல்லும் வழியை சொல்லியிருப்பார்?

பதில் : "நாக்கில்லாதோர் பேச முடியாதே!

04. கேள்வி : ஒரு கூடாரத்தில் பத்து சேவல்கள் இருந்தன. ஒரு சேவல் இரண்டு முட்டை இட்டால் பத்து சேவல்களும் விட்ட முட்டைகளின் எண்ணிக்கை யாது?

பதில் : சேவல் முட்டை இடாதே!

05. கேள்வி : வாழைமரம் கட்டுவது ஏன்?

பதில் : கட்டவில்லையானல் வாழை மரம் விழுந்து விடும்.

06. கேள்வி : தோசையை ஏன் திருப்பிப் போடுவது

பதில் : தானாகத் திரும்பாது

07. கேள்வி : எலிக்கு ஏன் வாலுண்டு

பதில் : செத்தால் பிடித்து எறிவதற்கு


08. திருமண வீடுகளில் ஏன் பசுவை முன்னுக்கு கட்டுவது

பதில் : திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் கட்டவில்லையானால் அப்பசு பயிரை மேய்ந்து விடும்.

## நிலையான தோல்வியுமில்லை

நீ மக்களுக்கு எஜமானாகா இருக்கலாம்.
ஆனால் ஈ எறும்பு ஒன்றுக்காவது எஜமானாக இருக்க முடியுமா
உன் பத்து ரூபாய் நோட்டுக்கு பத்தாயிரம் பேர் வரலாம் பத்து ரூாபய் நீட்டினால் பத்து பட்டாம் பூச்சி வருமா
உட்காந்திருப்பது உன் தோட்டத்தில் பூவில் இருந்தாலும்
உன் வருகையைக் கண்டு வண்டு எழுந்திருக்குமா
நீயும் உன் பணமும் பெறுவது நிலையான வெற்றியுமில்லை நாங்கள் எங்கள் ஏழ்மையையும் பெறுவது நிலையான தோல்வியுமில்லை.

ப.கோபிகா,
தரம் - 8A



# சீனியின் கதை

ஹாய்,
பிள்ளைகளே!
பெரியவர்களே அனைவரும்
கேளுங்கள் நான் உங்களுக்கு
சீனியின் கதையைக் கூறப் போகிறேன்

## எல்லோரும் கேட்டு ரசியுங்கள்

நான் கரும்பு என் கதை சொல்லப் பேகிறேன். எனது இளமைப் பெயர் கரும்பு என்னைப் பன்னிரெண்டு மாதங்கள் நன்கு வளர்த்து விவசாயிகளால் அடியோடு வெட்டப்படுவேன். என்னைப் போன்று பல்லாயிரக்கணக்கனோர் கட்டுக்கட்டாக கட்டி பெரிய வாகனங்கள் மூலம் தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்கின்றார்கள். அங்கு பெரிய இயந்திரங்களுக்குள் எம்மைச் செலுத்தி சாறு பிழியப்பட்டோம். அச் சாற்றுடன் பல இராசனப் பதார்த்தங்கள் சேர்த்து சீனி என்ற புதுப்பெயருடன் வெளியே வருகின்றோம். எம்மை இயந்திரங்களில் நெரித்த போது நாம்பட்ட துன்பமெல்லாம் மக்கள் எம்மைப் புகழ்ந்து பயன்படுத்தும் போது மறந்து விடுகின்றோம்.

"எம் கடன் பணி செய்து கிடப்பதே"


S.உஷாந்தினி, தரம் - 8
இளந்தளிர் சிறுவர் கழகம்
சுங்கான்கேணி


## கவிதைகள்

# சமாதானம்

எட்டாத உயரத்தில் நீயிரிக்க
வற்றாத வெள்ளமாய் நான் இருக்க
வருவதெப்போ சமாதானம்?


ஆசானைப் போற்றுவோம்
அகக் கண்ணைத் திறந்து
அறிவு ஒளி ஊட்டி
அகிலம் போற்ற எம்மை
வழிப்படுத்தும் ஆசான்களுக்கு
எனது எண்ணிலடங்காத நன்றிகள் வாழ்த்துக்கள்

தாய் தந்தையாருக்கு அடுத்து எம்மால் மதிக்கப்படும்
ஆசிரியர்களின் சேவை மிகப் புனிதமானது மகத்தானது

## ஆசிரியர் என்ற பதம்

ஆ - ஆக்குபவர்
சி - சிற்பி
ரி – யதார்த்தவாதி
ர் - அன்புடையவர்

## கிளிக் குஞ்சு



சிவப்பு நிறச் சொண்டாலே
சிரித்து என்னுடன் பேசுமாம்
பச்சை நிறச் சிறகாலே
பறந்து நன்றாயக் காட்டுமாம்
பழங்களையும் உண்ணுமாம்
பயற்றம் காயும் உண்ணுமாம்
பனமரத்தின் பொந்திலே
மறைந்து இருந்த கிளி குஞ்சு
கீ, கீ என்று தான் கீதம் பாடும்
கிழிந்த தென்ன மட்டையின்
கீழ் இருக்குக் கிளிக் குஞ்சு



# கல்வி



காலத்தால் அழியாதது
கள்வனால் கவரப்படாதது
கல்வி ஒரு கடல்
அதிலே மூழ்க நீர் கற்றுக் கொள்

கல்வி என்றும் குறையாத செல்வமாகும்
விலைமதிக்க முடியாத பெரும் பொக்கிஷமாகும்
இந்தக் கல்வி என்பது காற்றைப் போன்றது
அதை சுவாசிக்க கற்றுக் கொள்

முடிவு என்றது இல்லாத ஒன்றாகும்
மனிதர் முயற்சித்தால் முடியாத எதுவுமில்லை
எனவே கல்வி என்பது ஓர் ஏணி என்பது உணர்ந்து அதில் ஏறி
கற்று முன்வருவோம்.

பொ.டிலக்ஷிகா, தரம் - 8 இளந்தளிர் சிறுவர் கழகம், சுங்கான்கேணி.

# வேடன் எறிந்த அம்பினால் காயமடைந்த கழுகு!






வேடன் : ஓர் ஊரிலே வேடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் அம்பு எறிபவன். அவன் ஒரு நாள் எறிந்த போது அது கழுகைத் தாக்கியது.

அப்போது அந்தக் கழுகு ஒரு தோட்டத்தில் விழுந்தது. அந்த வீட்டுக்காரன் கண்டு சிகிச்சையழித்த போது மனைவி வந்தாள்.

மனைவி: மனைவி கணவரிடம் அந்தக் கழுகைத் தூக்கி வீசி விடுங்கள் என்று சொன்னாள். அது சிறிய கோழிக் குஞ்சுகளை, சிறிய பறவைகளை எதையும் விட்டு வைக்காது. எல்லாவற்றையும் பிடித்து உ(தி)ண்று விடும் இதற்கா சிகிச்சை அழிக்கிறீர்கள். இதைத் தொட்டாலே பாவம். தூக்கி எறிந்து விடுங்கள் என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினாள் மனைவி.

கணவன்: இந்தக் கழுகு நீங்கள் சொல்வது மாதிரி செய்திருந்தாலும் அதற்குக் கஷ்டம் வரும் நேரத்தில் உதவுவோர்தான் மனிதன் சிகிச்சை அழித்த பிறகு கழுகு பறந்து போனது.

மனைவி/கணவன் : கழுகிற்கு சிகிச்சை அழித்தவரின் குழந்தை தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது அந்தக் குழந்தையைப் பாம்பு கொத்த வந்தது. அப்போது சிகிச்சை அழித்த கழுகிற்கு மேல் பறந்து போகும் போது

யோசித்தது. நமக்கு சிகிச்சை அழித்தவரின் குழந்தை என்று வேகமாக வானத்தில் இருந்து பூமிக்கு மின்னல் வேகத்தில் கீழ்நோக்கி வந்து பாம்பைத் தூக்கி குழந்தையைக் காப்பாற்றியது. இதைக் கண்ட மனைவி, கடும் வருத்தமுற்றாள் நான் சிகிச்சை அழிக்கக் கூடாது என்ற கழுகு தான் குழந்தையைக் காப்பாற்றித் தந்தது. அப்போது கணவன் கூறினான். நாம் ஒருவருக்கு மற்றவர்களுக்கு உதவுகிற போது அந்த உதவி நமக்கு ஒரு கஷ்டம் வரும் போது எங்களைக் காப்பாற்றும் என்பதை இப்போதாவது உணர்ந்து கொள் சுமதி என்றார்.

# தாய்

தாய் என்பது இரண்டெழுத்து
பாசம் என்பது மூன்றெழுத்து
சுரக்காய் கொடிக்கு தன்
காய் பாரம் இல்லை
அதேபோல்
என் தாய் என்னைப் பாரமாக
நினைப்பதில்லை
மலை உச்சியில் இருந்து
பாய்ந்து வரும் நீரைப்போல்
என்னைக் கண்டவுடன்
என் தாயின் கண்களில்
இருந்து
வருவது கண்ணீர்

தாய் ...
நான் அழும் போது
என்னை ஏழு
தேவதைகள் தாலாட்டுவார்கள்
அவளின் உருவம் தான்
என் அன்னை

J. ஜென்சி, கருங்காலிச்சோலை
தீபச்சுடர் கழகம், பேத்தாழை

# வனங்களை அழித்தல்

இயற்கை அன்னை கொடுத்த கொடைகளில் ஒன்றாக வனங்கள் அமைகிறது. மரங்களை வெட்டுவதாலும் காடுகளை அழிப்பதனாலும் வனங்கள் அழிவடைகிறது.

மனிதனின் தேவைகளுக்காக உதாரணமாக விறகிற்காக, விவசாயத்திற்காக, புதிய குடியிருப்புக்காக, தள பாடங்களுக்காக வனங்கள் அழிக்கப்படுகின்றது. மனித சுய தேவைகளுக்காக வளங்களை அழிக்கின்றார்கள்.

இவ்வாறாக வள(ன)ங்களை அழிப்பதனால் சூழலின் அழகு குறைவடைகின்றது. மழைவீழ்ச்சி குறைவடைகின்றது. நீர்ப் பற்றாக்குறை, வனங்களை அழிப்பதனால் சூழலுக்கு தீங்கு ஏற்படுவதுடன் விலங்குகள் உணவுக்காக உறைவிடங்களுக்காக, நீரிற்காக பெரும் சிரமங்களை எதிர் நோக்கும் மனிதனுக்கு முக்கியமான தேவை நீர்த்தேவை. மழைவீழ்ச்சி குறைவடைவதனால் பயிர்ச் செய்கை, விவசாயம் என்பன பாதிப்படைகிறது.

இவ்வாறாக வனங்களை அழிக்க விடாமல் தடுத்தல் வேண்டும். அதாவது காடுகளுக்கு தீ வைக்காமலும் பார்க்க வேண்டும்.

நம் வருங்கால சந்ததியினர்களுக்காக வனங்களைக் காத்து இன்னும் பல மரங்களை நட்டு அவர்களுக்கு கையளிக்க வேண்டியது தமது கடமை ஆகும்.

ஜே.ஜென்சி,பேத்தாழை

# சிறுவர்களின் ஏக்கம்

மண்ணில் பிறந்தோம், தவழ்ந்தோம்
நாளடைவில் எழுந்தும் நடந்தோம்
மழலை மொழியைப் பொழிந்தோம்
மனதில் அழுக்கை ஒழித்தோம்

காலப்போக்கில் பேசவும் பயந்தோம்
கண்ணில் ஓயாத கண்ணீர் வடித்தோம்
பெரியவரை நாளும் மதித்தோம்
பெரியவர் வாக்கில் அடிமையாய் நனைந்தோம்

எட்டிச்செல்ல நாளும் தவிர்த்தோம்
ஆடி ஓடி விளையாடும் வயதில்
அன்பில்லாமல் அநாதையாய் இருந்தோம்
கருவில் இருந்து கல்லறை வரையிலும்
கருத்தொருமிக்காமல் காலத்தைக் கழித்தோம்

கனவிலே விருப்பு வெறுப்புக்களைப் புரிந்தோம்
காலம் அறியாமல் பாதையைக் கடந்தோம்
நனவிலே ஆயிரம் ஆசைகளைப் புதைத்தோம்
கல்வியை என்றும் தேடி அலைந்தோம்
கற்றோனை என்றும் மறவாமல் பணிந்தோம்
கற்பும் நட்பும் கண்ணிமையாய் பாதுகாப்போம்.

நி. அனுயா

தீபமலர் சிறுவர் கழகம், கண்ணகிபுரம்

# பெற்றோரின் மகத்துவம்

கடவுள் தந்த கடுவை — பத்து
மாதம் தன்னில் சுமந்து — தன்னை
உருக்கி உனக்கு உயிர் கொடுத்து
பாரினிலே படைத்த கடவுளைப்
பார்க்கிலும் கண்ணிய மானவள்
உன் தாய்!
பெற்றெடுத்த முத்தான உன்னை
சிற்பிபோல் பாதுகாத்து அன்னையை விட
ஒடு படி அன்பூட்டி ஆதரவு தந்து ஆசைகளை
நிறைவேற்றும் அற்புதமானவர்
உன் தந்தை!

நி.அனுயா,
தீபமலர் சிறுவர் கழகம்
கண்ணகிபுரம், வாழைச்சேனை



## Technology

Technology means innovations utilized in the invention of modern tools and machinery and their application in the fields of science and indication. But this definition is not proper enough to explain the real and deepest sense. Technology is something new which makes industry and agriculture etc. easier

Moreover, jobs done by machines are closer to perfection than those done by the labor of people Modern technology is now being used in all countries in various fields.

Robots and computer are the most advanced technological innovations in the present world. while computers instantly perform almost every tricky tasks done by the human brain robots perform man's physical duties even more accurately.

**N. Thadshayini (Secretary)**
Winning Star Arts Club, Valaichenai

# சிறுவர் தின வாழ்த்துக்கள்...

அனுசரணை :

WAR child HOLLAND

ESCO

அச்சு : அக்ஷித்தா பதிப்பகம்

விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை